சத்திய வேத

# பாதுகாவலன்

Telegram : "CATHOLIC PRESS", JAFFNA. 1876-ம் வருஷம் ஆரம்பிக்கப்பட்டது. Telephone : No 300

REGISTERED AT THE CEYLON G. P. O. AS A NEWSPAPER.

"கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வியர்த்தம்"

86-ம் புத்தகம் | யாழ்ப்பாணம் 1961-ம் ஆண்டு ஐப்பசி மாதம் 7-ந் திகதி சனிக்கிழமை — பிரதிசதம் 12 | 39-ம் இலக்கம்

# தமிழ்மொழியில் திருமறைச் சடங்குகள்

திருமறைச்சடங்குகளில் தாய்மொழியை உபயோகிக்கப் பரிசுத்தஸ்தானம் சில ஆண்டுகளுக்குமுன் அளித்தபொது உத்தரவைப் பயன்படுத்தி, இலங்கைக் கத்தோலிக்க மேற்றிராணிமார் பரிசுத்த பாப்பரசரின் ஸ்தானாபதியால் பத்துவருடங்களுக்கு அங்கிகரிக்கப்பெற்ற திருச்சடங்குநூலின் தமிழ்மொழிபெயர்ப்பை இலங்கையில் தமிழ்ப்பேசும் குருமாரினதும், விசுவாசிகளினதும் பாவிப்புக்கென உத்தியோக பூர்வமாக வெளியிட்டுள்ளனர். இந்நூலுக்குத் திருச்சடங்குக்கோவை என்றபெயரையும் கொடுத்துள்ளனர். சிலமாதங்களுக்குமுன் இதேபோன்ற திருச்சடங்கு நூல் சிங்கள மொழியில் வெளியிடப்பட்டது வாசகர்களின் ஞாபகத்திலிருக்கும்.

'திருச்சடங்குக்கோவை' என்னும்நூலில் ஞானஸ்நானம், மரணஆபத்துவேளையில் கொடுக்கப்படும் உறுதிப்பூசுதல், மெய்விவாகம், அவஸ்தைப்பூசுதல், மரணத்தருவாயிலிருப்போருக்குரிய சடங்குகள், பிரேதஅடக்கம், ஆசிர்வாதங்கள் முதலிய திருச்சடங்குகளின்போது சொல்லப்படும் அழகான செபங்களை விசுவாசிகள் நம்தமிழ்மொழியில் படித்துக்கருத்தறிந்து, இன்புற்று, அத்திருச்சடங்குகளில் கூடியபத்தியுடன் செயல்முறையிற் பங்குகொண்டு பயனடைய இப்போது வாய்ப்புக்கிடைத்துள்ளது. இந்நூல் ஒவ்வொரு கத்தோலிக்க குடும்பத்திலும் அவசியம் இருக்கவேண்டிய ஒன்றாகும். இப்பரிசுத்த நூலைத் தமிழ்மொழிபேசும் குருமாரும், விசுவாசிகளும் நன்குபயன்படுத்துவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

**விற்பனைக்கு**

**திருச்சடங்குக் கோவை**

பிரதி விலை: 3-50

கிடைக்குமிடம்:

அதிபர்,
அர்ச். சூசைமாமுனிவர் அச்சகம்,
யாழ்ப்பாணம்.

ஒரு மேற்றிராணியாரையும், 135 குருமாரையும்

## நாடுகடத்தினர் கஸ்திரோ

ஹவனாவில் உதவிமேற்றிராணியாரான எட்வேட் பொஸோ ஆண்டகையும், 135 குருமாரும் கஸ்திரோவின் அதிகாரிகளால் கியூபாவிலிருந்து நாடுகடத்தப்பட்டிருக்கின்றனர். "கோவடொங்கா" எனும் கப்பலில் ஏற்றி, எல்லோரையும் ஸ்பெயினுக்கு அனுப்பியிருக்கின்றனர். இவர்களில் அதிகமானோர் ஸ்பானியராயினும் 46பேர் கியூபா பிரசைகள். பொஸோ ஆண்டகை எங்கோ மறைந்துவிட்டார் எனப் பரவிய செய்தி, பின் அவர் கைதியாக்கப்பட்டிருக்கிறார் எனத் தெளிவாயிற்று. கடந்த சித்திரை மாதம் நடந்த ஆக்கிரமிப்பின்போதும் முன்னொருமுறை பொஸோ ஆண்டகை கைதுசெய்யப்பட்டிருந்தார். இவர் கியூபா அரசாங்கத்தை வெளிப்படையாய்க் கண்டித்து வந்தார்.

**பிரசாரப் போர்வை**

புரட்டாதி மாதம் 10-ந் திகதி சிநேகத்தின்மாதா கோவிலில் அரசாங்கத்துக்கு மாறாக நடந்த நடபடிக்கைகளுக்காக இவர் பழிசுமத்தப்பட்டார். அந்நடபடிக்கைகள் காரணமாக இளம் கத்தோலிக்க தொழிலாளரில் ஒருவர் உயிரிழந்தார். பட்டாளத்தவரல்ல, கத்தோலிக்கரே அம்மரணத்துக்குக் காரணமெனவும், அரசாங்கம் பிரசாரஞ் செய்தது. பூமதானவேளை பன்னூற்றுக் கணக்கானோர் பங்குபற்றச் செய்து, இறந்தவர் கஸ்திரோ ஆதரவாளர் எனவும், கத்தோலிக்கசபை கொலையை ஏவினதாகவும் கண்டிக்கப்பட்டது.

இக்கலாட்டாவின் உண்மைக் கோலத்தை மறைக்கும்பொருட்டு அமெரிக்க மேற்றிராணிமாரும், அரசாங்கமும் கஸ்திரோவுக்கு விரோதமாக எடுக்கும் சதி நடபடிக்கையில் பொஸோ ஆண்டகை முக்கியமான உறுப்பினர் எனப் பிரசாரஞ் செய்தது கியூபா அரசாங்கம். அரசாங்கம் கைப்பற்றிய கத்தோலிக்க சர்வகலாசாலையின் முன்னையநாள் அதிபராயிருந்த ஆண்டகை, "புரட்சிகர முயற்சியில்" ஈடுபட்டாரெனக் குற்றங் கூறப்பட்டார்.

அகில கிறிஸ்தவசபைகள் மாநாட்டிற்கு
உத்தியோகபூர்வமான

## கத்தோலிக்க பார்வையாளர்

புதுடில்லியில் கூடவிருக்கும் உலக கிறிஸ்தவ சபைகளின் மாநாட்டிற்கு வத்திக்கான் சரித்திரத்தில் முதன்முறையாக ஐந்து பார்வையாளரை உத்தியோக பூர்வமாக அனுப்பத் தீர்மானித்துள்ளது. இப்பார்வையாளர் கோஷ்டியில் ஒருவர் இல்லறத்தார். நெதர்லாந்தில் டச்சுக்கத்தோலிக்க அதிகாரபீடத்தின் சார்பாக வத்திக்கான் பொதுச்சங்கத்தில் ஸ்தானாபதியாகவிருக்கும் திரு. ஜான்குறாட் அவர்களே புதுடில்லி மாநாட்டிற்குச் செல்லவிருக்கும் இல்லற பார்வையாளராவர். இவருடன் அமெரிக்காவைச் சேர்ந்த வண. எட்வேட்டவ், எஸ். ஜே. சுவாமி அவர்களும், பிரான்ஸ் தேசத்தைச் சேர்ந்த வண. எம். ஜே லே ஜில்லு, ஓ. பி. சுவாமி அவர்களும், இந்தியாவிலிருந்து மற்றும் இரு குருமாரும் மாநாட்டிற்குச் செல்லவிருக்கின்றனர்.

மேற்படி மாநாடு கார்த்திகை மாதம் 18-ந் திகதி முதல் மார்கழி மாதம் 6-ந் திகதிவரை நடைபெறவிருக்கின்றது. புதுடில்லி மாநாட்டிற்குப் பார்வையாளரை அனுப்ப வேண்டுமென்ற தீர்மானம், அம்மகாநாட்டு நிகழ்ச்சிகள் இரண்டாம் வத்திக்கான் பொதுச் சங்கத்துக்கு ஆயத்தங்கள் செய்யும் வெவ்வேறு குழுவினருக்கு அதிக பயனளிக்கும் என்ற காரணத்தினாலேயே செய்யப்பட்டது என்று வத்திக்கான் அதிகாரி ஒருவர் தெரிவிக்கின்றார்.

கத்தோலிக்க பார்வையாளர்கள் மகாநாட்டில் கலந்துகொள்வார்களெனினும், அவர்கள் அங்கு நடைபெறும் பேச்சுவார்த்தைகளில் கலந்து கொள்ளவோ, வாக்களிப்புகளில் பங்குபற்றவோ அனுமதிக்கப்பட மாட்டார்கள் என்று தெரிவித்தார் அந்த வத்திக்கான் பேச்சாளர்.

### பரிசுத்ததந்தையின் அனுதாபம்

நம் பரிசுத்தபிதா 23-ம் அருளப்பர் திரு. ஹமஷீல்டின் அகால மரணத்தைக் குறித்து ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்திற்கும், சுவீடன் அரசாங்கத்திற்கும் தமது அனுதாபத்தைத் தெரிவித்தார்.

கருதினால் அகாஜியானியன் ஆண்டகை

## நோய்வாய்ப்பட்டார்

வேதப்பரப்புதல் திருச்சங்கத்தின் தலைவரான மகாமேன்மை தங்கியகர்தினால்அகாஜியானியன் ஆண்டகைஅவர்கள் நோய்வாய்ப்பட்டுத் தற்போது ரோமாபுரியிலுள்ள ஓர்சிகிச்சை நிலையத்தில் சிகிச்சை பெற்றுவருகிறார் என்று செய்திகிட்டியுள்ளது. கருதினால் ஆண்டகை அவர்கள் சென்றவருடம் புரட்டாசிமாதம் இலங்கைக்கும், இந்தியாவுக்கும் விஜயஞ் செய்தது வாசகர்களின் ஞாபகத்திலிருக்கும். சென்றஆனிமாதம் அர்ச். பத்திரிசியாரின் ஆண்டுக்கொண்டாட்டத்திற்குப் பரிசுத்த பாப்பரசரின் விசேஷ பிரதிநிதியாக அயர்லாந்து தேசத்திற்குச் சென்றிருந்தார்.

மாலகாசி குடியரசுநாட்டில் கத்தோலிக்க மதபோதகத்தின் நூற்றாண்டு நிறைவுவிழாவிற்குத் தலைமைவகிக்கும்படி ஆகாய விமானமார்க்கமாய்த் தானனறிவ் பட்டணத்திற்குச் சென்றுகொண்டிருந்த கருதினால் ஆண்டகை அவர்கள் சடுதியாய் நோய்கண்டு நைரோபி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். பின்னர் ரோமாபுரிக்கு ஆகாய விமானமூலம் கொண்டுசெல்லப்பட்டார். அவருக்குப் பதிலாக ஆபிரிக்காவின் முதற்கருதினாலாகிய மகாமேன்மைதங்கிய றூகம்வா ஆண்டவர் அவர்கள் நூற்றாண்டுநிறைவு விழாவுக்குத் தலைமைதாங்கத் தானனறிவுக்கு விரைந்துள்ளார்.

பரிசுத்த ஸ்தானத்தின் அனுமதியுடன் குருமாரும், கத்தோலிக்கரும் முந்திய மகாநாடுகளில் கலந்துகொண்ட போதிலும், வத்திக்கான் உத்தியோகபூர்வமாகப் பார்வையாளரை அனுப்புவது இதுவே முதன்முறையாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மேற்றிராசனங்கள் தரும் செய்தி

## மாத்தறையில் மாதா திருநாள்

### 10,000 பக்தர்கள் திருச்சுரூப பவனியில் கலந்துகொண்டனர்

கார்முகில்கவிந்து இருள்மூடியிருந்த தென்னிலங்கைவானம் வெளித்துக் கொடுத்தது. றாகுணே இராக்கினியும், மாத்தறை மாதாவுமாகிய தேவதாயின் வருடாந்தவிழா மிகவும்சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. வருடாந்த சுற்றுப்பிரகாரத்தில் சுமார் 10,000 பக்தர்கள் கலந்துகொண்டனர். தென்னிலங்கையின் யாத்திரைத்தலமாகிய இவ்விடத்துக்குப் புத்தளம், சிலாபம், கண்டி, நீர்கொழும்பு ஆதியாம் தூர இடங்களிலிருந்து யாத்திரிகர்கள் வந்திருந்தனர்.

அன்று சனிவாரம். கன்னியர்மடமும், கல்லூரிமைதானமும், எஞ்சிய இடங்களும், ஆலயத்துக்கும், கடலுக்கும் இடைப்பட்ட கரையோரமும் மாதாபக்தர்களினால் நிரம்பிவழிந்தது. கட்டளைக்குரவர் வண. றெட்றிகோ சுவாமியவர்களும், அவரது உதவிக்குரவர் வண. ஜோ. ராஜபக்ஷசுவாமியாரும், காலிமேற்றிராசனத்தின் ஏனையகுருமாரும் யாத்திரிகர்களுக்கு வேண்டிய உதவிகளைச் செய்தனர். காலி விக்கார்ஜெனறல் சுவாமியாரான அதிவண. மொன்சிஞ்ஞோர் ரி. என். அலெஸ்அடிகளார் மாலை வேஸ்பர் ஆராதனை நடத்தினார். அதிவண. மொன்சிஞ்ஞோர் அடிகள் மேற்படி விசாரணைப்பங்குக் கட்டளைக்குரவராயிருந்தபோதே இக்கோவிலைப் பிரபலியமாக்கினார். வேஸ்பரின்பின் சரித்திரப் பிரசித்திபெற்ற தேவஅன்னையின் திருச்சுரூபம் பவனியாகக் கொண்டுசெல்லப்பட்டது. மாதாவின் திருச்சுரூபம் பவனிவந்த மாத்தறைவீதிகள் மிகவும் அலங்காரமான தோரணங்கள், கொடிகள், பந்தர்களினால் இரம்மியமாக அலங்கரிக்கப்பட்டிருந்தன. மேற்படி திருநாளிலே பௌத்தமக்கள் காட்டிய அக்கறை மிகவும் வியப்பையளித்தது. திருநாட்பூசை மறுநாட்காலை சிலாபத்திலிருந்து பெருந்தொகையான யாத்திரைக் கோஷ்டியுடன் வந்த சிலாபம் விசாரணைப்பங்குக் குரவரால் பாடப்பெற்றது.

## பிரிவுபசாரம்

கடந்த ஒன்றரைவருட காலமாக நெடுந்தீவின் கட்டளைக்குரவராயிருந்த வண. எஸ். எல். யோசவ், O. M. I. சுவாமியார் அவர்களின் மாற்றங்காரணமாக, நெடுந்தீவு மத்தியபூமி வாலிபர் சங்கத்தார் அன்னாருக்கு 24-9-61-ல் ஒரு பிரிவுபசாரவிழா நடத்தினார்கள். அன்று பிற்பகல் 6 மணிக்கு மக்களும், பிள்ளைகளும், வாலிபர்களும் புடைசூழ்ந்து சென்று அவரையும், புதிய குரவர் வண. அன்ரன் இராசகாரியர் அவர்களையும் அழைத்துவந்து, ஆயத்தஞ்செய்யப்பட்ட உயர் ஆசனத்திலிருத்தி மாலைசூட்டி வரவேற்றனர்.

பிரிவுபசாரவிழா திரு. ஜி. அந்தோனிப்பிள்ளை ஆசிரியர் தலைமையில் நடைபெறலானது. ஏராளமான கிறிஸ்தவர்களும், பாடசாலைப் பிள்ளைகளும், வாலிபர்களுமாக அறுநூற்றுக்கதிகமானோர் சமுகமளித்திருந்தனர். பிரியாவிடைநாயகரை வாழ்த்தி வாலிபர்சங்கச் சிறார்களால் பிரியாவிடைக் கீதங்கள் படித்துக் கொடுக்கப்பட்டன. அவர் செய்த சேவைநலன்களைப் பாராட்டிச் செல்வர்கள், எஸ். ஆபிரகாம், ஜி. கிறிஸ்தோப்பர், எஸ். ஏபிரகாம் ஆகியோர் முறையே சொற்பொழிவாற்றினார்கள். வாலிபசங்கத் தனாதிகாரி செல்வன் வி. செபமாலையால் அன்பளிப்பு வழங்கப்பட்டது.

பிரியாவிடைநாயகர் எழுந்து "வாலிபர் முன்னேற்றமும், ஒற்றுமையும், அவர்கள் தமக்குக்காட்டிய நேரிய பண்பும் கடவுளுக்கே உரியது" என்ற பொருள்படச் சொற்பொழிவாற்றி அங்கு குழுமியிருந்த மக்களுக்குத் தமது அபிஷேக பூங்கரத்தின் ஆசியை அன்புடன்வழங்கினார். ஈற்றில் வாலிபசங்கச் செயலாளர் செல்வன் ஜே தோமாஸ் பிரியாவிடைநாயகர் செய்த உதவிகளுக்கு "அன்புக்கு அன்பு" ஏற்ற பதில் எனும் லத்தீன் சுலோகப்படி வாலிபர்சங்கத்தார் சார்பாகவும், அங்கு குழுமியிருந்த மக்கள் சார்பாகவும் குரவரவர்கட்கும், அக்கூட்டத்தைச் சிறப்பித்த அனைவருக்கும் நன்றிகூறிக் கடவுள் ஆராதனையுடன் கூட்டம் பி. ப. 8-30 மணிக்கு இனிதே முடிவெய்தியது.

— நிருபர்

## பிரசீடிய விழா

யாழ்ப்பாணம் சுண்டிக்குளி அர்ச். ஸ்நாபகயுவானியார் கோவிற் பங்கைச் சேர்ந்த மரியாயின்சேனைப் பிரசீடிய விழா ஆறு பிரசீடியங்களும் சேர்ந்து ஐப்பசிமாதம் 1-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை பின்னேரம் 3 மணியளவில் சகோதரர் பி. சி. பொன்னையா அவர்களின் தலைமையில் ஆரம்பமாகியது. ஞானத்தலைவர் வண. ஏ. எஸ். சிங்கராயர், O. M. I. சுவாமி அவர்கள் சொற்பொழிவாற்றுகையில், இந்தப் பங்கிலுள்ள கிறீஸ்தவர்கள் கிறீஸ்துவசீவியத்தில் வளர்வதற்குச் சேனையாளர் ஒன்றுசேர்ந்து அயராது உழைக்க வேண்டுமெனக் கேட்டுக்கொண்டார். தலைவரின் நன்றியுரையுடனும், ஞானத்தலைவரின் திருக்கர ஆசீர்வாதத்துடனும் விழா முடிவுற்றது.

## செப அப்போஸ்தலசபை வெளியீடு

### ஐப்பசிமாதம்

**பொதுக்கருத்து:**—மேற்படிப்புக்கான கத்தோலிக்க பல்கலைக்கழகங்களின்தொகையும், வசதிகளும் பெருகும்படியாக வேண்டிக்கொள்வது.

**வேதபோதககருத்து:**—பண்பாடு பெற்றிருந்தும் இன்னும் விசுவாச ஒளியைப்பெறாத மனிதரிடையே நடைபெறும் அப்போஸ்தல அலுவல் அதிகபலனுள்ள ஊக்கம்பெறுவதற்காக மன்றாடிக்கொள்வது.

* * *

**காலைக்காணிக்கைச் செபம்**

யேசுவின் திருஇருதயமே, நாங்கள் கட்டிக்கொள்ளும் துரோகங்களுக்குப் பரிகாரமாகவும், தேவரீர்திருப்பீடத்தில் ஓயாமல் உம்மைத்தானே பலியாகஒப்புக்கொடுக்கும் சகல கருத்துகளுக்காகவும் அடியேன் இன்றுசெய்யும் செபங்களையும், கிரியைகளையும், படுந்துன்ப வருத்தங்களையும் அர்ச்சியசிட்ட கன்னிமரியாயின் மாசில்லாத இருதயத்தின்வழியாக, உமக்கு ஒப்புக்கொடுக்கிறேன். விசேஷமாகச் சபையாருக்குக் குறிக்கப்பட்ட சகல கருத்துக்களுக்காகவும், பரிசுத்த பாப்பரசர் இம்மாதத்துக்கென நியமித்த கருத்துகளுக்காகவும் அவைகளை ஒப்புக்கொடுக்கிறேன்.

### ஆசிரியர் க. வஸ்தியாம்பிள்ளை அவர்களின்

## தேகவியோகம்

திருநெல்வேலியிலே சைவக்குடும்பமொன்றில் உதித்தவரும், கொழும்புத்துறை ஆசிரியகலாசாலையில் பயிற்சிபெற்றுக் கடைசியாக நாவாந்துறைக் கத்தோலிக்க பாடசாலையில் உதவித் தலைமையாசிரியராகக் கடமையாற்றிவந்தவருமான திரு. க. வஸ்தியாம்பிள்ளை அவர்கள் கடந்த 21-9-61 வியாழக்கிழமை பாடசாலைக்குச் செல்லும் வழியிலே மயக்கமுற்றுவிழுந்து மாணத்திரையில் மறையலாயினர். மரிக்கும்போது இவருக்குவயது 52.

இவர் தேவபக்தியில் சிறந்தவராய், சற்குணசீலராய், எவர்க்கும் இனியவராய்த் தாம்மாத்திரமல்ல, தமதுவழித்தோன்றியோரும் நல்வாழ்வுபெற வழிகாட்டி, ஆசிரியஉலகிற்கு ஓர் எடுத்துக்காட்டாக விளங்கிக் கடந்த 32ஆண்டுகளாகக் கோண்டாவில் றோ. க. பாடசாலையிலும், யாழ்ப்பாணம் அர்ச். அடைக்கலநாயகி பாடசாலையிலும், சில்லாலை செண்மேறிஸ் பாடசாலையிலும் ஆசிரியத்தொண்டில் ஈடுபட்டுவரலாயினர்.

மறுநாள் சாயந்தரம் யாழ்ப்பாணத்திலும், இவர் ஆசிரிரியத்தொண்டாற்றியுள்ள பல்வேறிடங்களிலுமிருந்து திரளான இனசனர், சிநேகிதர், அனுதாபிகள் வந்துகூடியசமுகத்திலே இவரின் பூதவுடல் வைக்கப்பெற்ற பேழையின் வண்டியை நாவாந்துறைப்பாடசாலை மாணவர்களும், இனசனரும் இழுத்துச்செல்ல, ஆசனக்கோவில் உதவிக்குரவர் மற்றும் இருகுரவர்கள் துணைபுரிய வீட்டிலும், கோவிலிலும், சேமக்காலையிலும் துக்கசங்கீதம் பாடிச்சென்று கடைசிஆசீர்வாதம்கூறிநிற்கப் பூமதானம் செய்யப்பட்டது. இவரை இழந்து துன்புறும் பாரியார், புத்திரர், மருகர், மற்றும் இனசனருடன் நாமும் அனுதாபப்படுகிறோம். அவரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக மன்றாடும்படி வேண்டுகின்றோம். இவரின் ஆன்மா யேசுவில் துயில்வதாக.

## கோட்டுவிற்பனவு விளம்பரம்

**இல. M. B. 3041**

கட்டுடை
இராசசிங்கம் அதிதப்பிள்ளை
— வழக்காளி.
எதிராக
யாழ்ப்பாணம், நாவாந்துறைறோட்
பெரியதெரு இல. 57

1. சேகு சுல்தான் அப்துல்காதர் முகமத் சதுக்குத்தில்லாவும்
2. பெண் மய்மூனும் பரித்தித்துறை புலோலி
3. நாகலிங்கம் கந்தையாவும்

— எதிராளிகள்.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M. B. 3041-ம் இலக்கவழக்கில் எனக்குக் கிடைத்தகோட்டுக்கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் ஒருதுண்டுக்காணியை 1961-ம்ஸு கார்த்திகை மீ 11-ந்உ சனிக்கிழமை முற்பகல 10மணிதொடக்கம் அந்தக்காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல்வட்டி ரூபா 6,960-ம், 17-9-59தொடக்கம், 17-5-60 வரைக்கும் ரூபா 6,000-க்குப் 12வீத வட்டியும், அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 5வீதவட்டியும், கோட்டுச்செலவு 251ரூபா 29சதமும். இந்த முதல்வட்டியில் ரூபா 500 வழக்காளிக்குக் கொடுபட்டிருக்கிறது.

**ஆதன விபரம்**

வடமாகாணம், யாழ்ப்பாணடிஸ்திறிக் வண்ணார்பண்ணை கோயிற்பற்று, வண்ணார்பண்ணை தென்மேற்கிறை "புளியடி" பர. நில. இலா. 1 (ஒன்றும்), குளி $6\frac{1}{2}$-யும். யாழ்ப்பாணம் காணிப்பதிவு கந்தோரில் D196/249 இலக்கத்தில் பர. நில. இலா. 1 (ஒன்று) குளி $\frac{7}{8}$ என்றும் காண்பிக்கப்பட்டிருக்கிறது. இத்துடன் கல்வீடும், கிணறும், பயிர்வகைகளும், மற்றும் அதைச்சேர்ந்தவைகளும். எல்லை: கிழக்கு — ஒழுங்கை. வடக்கு — முகலீன் லெவ்வையின் உரிமைக்காரரின் ஆதனம். மேற்கு — சாகுல்கமீத் முகமத்லெவ்வை கைம்பெண் முகமத் பதும்மாநாச்சியாவின் ஆதனம். தெற்கு— சாலில்கமீத் முகமத்லெவ்வை கைம்பெண் முகமத் பதும்மாநாச்சியாவின்ஆதனமும், நாவாந்துறை றோட்டும். இவ்வாதனம் யாழ்ப்பாணம் காணிப்பதிவுகந்தோரில் 253/163 இலக்கத்தில் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

அ. ஜெக்நாதன்,
கோமிஷனரும், விலமதிப்பாளரும்
16 A, அம்மன் றோட்,
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

**இல. M. B. 2765**

சரவணை

1. பொன்னம்பலம் நடராசாவும்
2. பெண் நாகேஸ்வரியும்

— வழக்காளிகள்.

எதிராக, சரவணை

1. சுவாமிநாதர் கார்த்திகேசுவும்
2. காலஞ்சென்ற பெண் சிவகாமிப்பிள்ளையும். முதலாம்எதிரி தனித்தும், இரண்டாம்எதிரியின் ஆதனங்களின் தத்துவகாரனுமாக

— எதிராளிகள்.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M. B. 2765-ம் இலக்கவழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் ஒருதுண்டுக்காணி 1961-ம்ஸு கார்த்திகை மீ 11-ந்உ (11-11-61) சனிக்கிழமை முற்பகல் 10 மணிதொடக்கம் அந்தக்காணிக்குள்நின்று பிரசித்தஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல்வட்டி ரூபா 776-ம், 19-3-59 தொடக்கம் 18-8-59 வரை ரூபா 500-க்குப் 12%வட்டியும், அதன்மேல் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை கோட்டின்வீதவட்டியும், கோட்டுச்செலவு 186ரூபா 17சதமும். இதில் ரூபா 90 கொடுபட்டிருக்கிறது.

**காணி விபரம்**

வடமாகாணம், யாழ்ப்பாணடிஸ்திறிக் தீவுப்பகுதி ஊர்காவற்றுறை கோயிற்பற்று, சரவணையிறை "சதுரன்காரயன் உருணி" பர. நில. இலா. ஆறு (ப. நி. இ. 6, 0குளி). எல்லை: கிழக்கு — இரத்தினத்துக்கும், ஆச்சிப்பிள்ளைக்கும தெற்கிலிருக்கும் ஆதனங்களுக்குச்செல்லும் நடைபாதையும். வடக்கு — ஒழுங்கை. மேற்கு — இலட்சுமணபிள்ளை பாலசுப்பிரமணியத்துக்குரிய ஆதனம். தெற்கு— ஆறுமுகம் பெண் செல்லம்மாவின் ஆதனம். இதடங்கலும். தெற்கிலிருக்கும் ஆதனத்துக்குத் தெற்கெல்லையிலிருக்கும் நடைபாதையில்போக்குவரத்துரிமையும்.

இவ்வாதனம் யாழ்ப்பாணம் பதிவுகந்தோரில் C 198/254-ம் இலக்கத்தின்கீழ் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

செ. விசாகரத்தினம்,
கோமிஷனரும், விலமதிப்பாளரும்
கம். 133, பருத்தித்துறைவீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்,
27-9-61.

## பிழை திருத்தம்

பாதுகாவலனிலே 23-9-61 இல் வெளிவந்த 6262 எனும் வழக்கு இலக்கத்தைக் கொண்ட கோட்டுவிற்பனவு விளம்பரத்தின் முகப்பில் "அப்பிளிக்கேசன்" என்றிருப்பது தவறாகலின், அதனை நீக்கி வாசிக்கவும்.

## நன்றித்துதி

இரக்கமுள்ள யேசுவின் திருஇருதயத்திடமும், பரிசுத்த சதாசகாயத்தாயிடமும், கோடிஅற்புதரான அர்ச். அந்தோனியாரிடமும், கைவிடப்பட்டவர்களின் தஞ்சமாகிய அர்ச். யூதாததேயுவிடமும் நான்இரந்துகேட்ட மன்றாட்டுகள் கிடைத்ததினால் என் முழுஇருதயத்துடனும் இவர்களுக்கு நன்றிசெலுத்தி என்நேர்த்திப்படி இதைப்பிரசுரிக்கிறேன். இரக்கமுள்ளதேவன் தோத்திரிக்கப்படுவாராக.

நன்றியறிதலுள்ள
மன்னார் அடியாள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்நாட்டுச்செய்திகள்

## கமக்காரரும் சிகறெற் புகையிலையும்

சிகறெற்புகையிலைச் செய்கையிலே ஈடுபட்டுவந்த கமக்காரருக்கு இலங்கைச் சிகறெற்கம்பெனி முன்னர் அளித்துவந்தஆதரவைக் குறைத்துக் கொண்டமையாலே அவர்களில்அநேகர் அதிருப்தியடைந்து சிகறெற்புகையிலைச் செய்கையைக்கைவிட்டுப் பீடிப்புகையிலை, மற்றும்பயிர்வகைகளைச் செய்வதில் முனைந்திருக்கிறார்கள்.

## பயிற்சிபெற்ற தமிழாசிரியர்கள்

தமிழாசிரிய பயிற்சிபெற்றவர்களாய் 280ஆசிரியர்கள் வேலையின்றியிருக்கிறார்கள்; அதனால் தமிழ் எஸ். எஸ். சி. பரீட்சையிலே சித்திபெற்றவர்கள் ஆசிரியர்களாக நியமிக்கப்படமாட்டார்கள்; வேலையற்றிருக்கும் 190தமிழ்ப் பட்டதாரிகளும் சிங்களம்படித்தால் அவர்களுக்கு வேலைகொடுக்கப்படுமென்று சனப்பிரதிநிதிகள்சபையிலே கல்விமந்தி தெரிவித்திருக்கின்றார்.

## திரு. குவாஸ் காலமானார்

பண்டாரநாயக்கா கொலைவழக்கு விசாரணையிலே எதிரிகளான புத்தரக்கிததேரோ, எச். பி ஜெயவர்த்தன என்பவர்களின்சார்பாகத் தோன்றி விவாதித்த பிரபல லண்டன்நியாயவாதியான திரு. பினியாஸ் குவாஸ், கியூ சி. லண்டன்நகரிலே சென்றவியாழக்கிழமை காலஞ்செல்லலாயினாரெனச் செய்திகிடைத்திருக்கிறது. 69வயதுடையவரான இவர் சென்ற ஆவணிமாதம் உகண்டாநாட்டிலே ஓர்வழக்குவிசாரணையில் ஈடுபட்டிருந்தபோது சுகவீனமுற்றார்.

## ஆசிரியரும் அரசியல் உரிமையும்

அரசாங்கஊழியர்களுக்கு அரசியல் உரிமை வழங்குவதில்லையென்று மந்திரிசபை முடிவுசெய்திருக்கிறது; ஆசிரியர்கள் அரசாங்கஊழியர்களாக மாறியதும் அரசியல்உரிமையை இழந்துவிடுவார்கள்; அதனால் அரசாங்கத்தின்கீழ் கடமையாற்றும் ஆசிரியர்களுக்கு அரசியல் உரிமை வழங்கப்படமாட்டாது; உரிமைக்காக அவர்கள் இளைப்பாறவிரும்பினால் அவர்களின்மனுக்கள் நன்குஆராயப்படுமென்று கல்விமந்தி சென்றவியாழக்கிழமை சனப்பிரதிநிதிகள்சபையிலே தெரிவித்திருக்கின்றார்.

## அவசரகாலச்சட்டசெலவு

அவசரகாலச் சட்டத்தை நடைமுறைக்குக் கொண்டுவந்ததன்விளைவாகப் பாதுகாப்புமந்திரி காரியாலயத்திற்கென்று ஒதுக்கப்பட்ட நிதியிலும் பார்க்க மேலதிகமாகஏற்பட்டுள்ள செலவைச் சமாளிக்குமுகமாக 41இலட்சத்து 70ஆயிரத்து 821ரூபா கோரும் உபமான்யப் பிரேரணைஒன்று சென்றவியாழக்கிழமை சனப்பிரதிநிதிகள்சபையிலே சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. பட்டாளங்களை அவசரகால சேவைக்கு அழைத்ததால்ஏற்பட்டுள்ள செலவு இதுவாம். இதுவிஷயமாய்த் திரு. டபிள்யு. தஹநாயக்கா சபையில் பேசியபோது: இருபதுபெரியகல்லூரிகளைக் கட்டக்கூடியநிதி அவசரகாலச் சட்டத்தை நடைமுறைக்குக் கொண்டுவருவதிலே செலவிடப்பட்டிருக்கிறது; இப்படி எவ்வளவுகாலம் செலவுசெய்யப் போகிறீர்கள்? வயிற்றைக்கட்டுமாறு சொல்லிக்கொண்டு அரசாங்கத்தைப்பாதுகாக்க அவசரகாலச்சட்டத்தை நடைமுறையில் வைத்திருக்கிறீர்களேயெனக் கூறலாயினர்.

## பாப்பரசரின் பேட்டிபெற்றார்

இலங்கைப் பிரபலகத்தோலிக்கபிரமுகரான சேர் பிலிப் றெட்றிக்கோ அவர்களுக்கு 23-ம்அருளப்பபாப்பரசர் காஸ்தெல்காந்தல்போவிலுள்ள தமதுவேனிற்காலமாளிகையிலே பிரத்தியேக பேட்டி ஒன்று அருளியிருக்கிறாரெனச் செய்திகிடைத்திருக்கிறது. சேர் பிலிப் அவர்கள் தமது பாரியார், புதல்விசமேதாராகப் பேட்டிக்குச் சென்றிருந்தார். பாப்பரசர் அவரின் குடும்பத்துக்கு அப்போஸ்தலிக்கஆசீர்வாதம் அருளலாயினர்.

## பிச்சைக்காரருக்கு நல்லகாலம்

குருடர்களாகவும், அங்கவீனர்களாகவும உள்ளவர்களைத்தவிர ஏனையதிடகாத்திரமுடைய பிச்சைக்காரரையெல்லாம் அரசாங்கபண்ணைகளிலும், குடியேற்றகாணிகளிலும் குடியேற்றவும், முதியபிச்சைக்காரரை விருத்தாப்பியர்விடுதிகளுக்கு அனுப்பிவைக்கவும் அரசாங்கம் தீர்மானித்திருக்கிறது. இதுவிஷயமாய்ப் பிச்சையெடுப்பதைச் சட்டவிரோதமாக்கும் சட்டம்ஒன்று விரைவிலே நடைமுறைக்குக் கொண்டுவரப்படவிருக்கிறது.

## புதிய போஸ்றல் ஆடர்கள்

கொழும்புப் பெரியதபாற்கந்தோரிலே 15ரூபா, 20ரூபா பெறுமதியான இருபுதியஇனப்போஸ்றல்ஆடர்களைப் போக்குவரத்துமந்திரி சென்றதிங்கட்கிழமை முதன்முதலாகவாங்கி அவற்றின்விற்பனவை ஆரம்பித்துவைத்தார். இதுவரை ப்ரவனியில் இருந்துவந்த போஸ்றல்ஆடர்களும் இப்போது தமிழ்,சிங்களம்,,ஆங்கிலமாகிய மூன்றுமொழிகளிலுமே அச்சிடப்பட்டு விற்பனைக்குத் தயாராயிருக்கின்றன. அவ்வேளை மந்திரி பேசியவிடத்து, அரசாங்கத்தின் மொழிக்கொள்கையை முன்னிட்டுப் புதியபோஸ்றல்ஆடர்கள் மூன்றுபாஷைகளிலும் அச்சிடப்பட்டிருப்பதாகக்கூறினார்.

## கிராமசேவையாளர் பரீட்சை

கிராமத் தலைமைக்காரரிடமாக நியமனஞ்செய்யப் படவிருக்கின்ற கிராமசேவையாளர்பரீட்சையிலே சித்தியடைந்தவர்களின் நாமங்களைப் பரீட்சைப்பகுதி சென்றவியாழக்கிழமை உள்நாட்டுமந்திரி காரியாலயத்திற்கு அனுப்பிவைத்திருக்கிறது. இவர்களிலே 3,267பேர் தெரிவுசெய்யப்பெற்று இவ்வருடமுடிவிற்குள் நியமனஞ்செய்யப்படுவார்களென்று எதிர்பார்க்கப்படுகிறது. சென்றஆடி மாதம் 23-ந்திகதிநடைபெற்ற கிராமசேவையாளர்பரீட்சைக்குப் 16,000 பேர்வரையிலே சமுகமளித்திருந்தார்கள்.

## பீடிக்குத் தடையில்லை

இலங்கைக்கும், இந்தியாவுக்குமிடையே பீடிஇறக்குமதி சம்பந்தமாக இருந்துவந்த ஐந்துவருடஒப்பந்தம் சென்றஆவணி 31-ந்திகதியுடன் முடிவடைந்துவிட்டது. இப்போது இந்தியாவிலிருந்து பீடிஇறக்குமதிசெய்யத் தடையில்லை. ஆனால், அதை அங்கிருந்து இறக்குமதிசெய்ய எவரும் முன்வரமாட்டார்களாம். ஏனெனில், முன்னர்பீடிக்கு இறுத்தலொன்றுக்கு 5ரூபா60சதமாக இருந்துவந்ததீர்வை இப்போது 16ரூபா60சதமாக உயர்த்தப்பட்டுள்ளது. அதனால் இவ்வளவு உயர்ந்ததீர்வைகொடுத்து அதனை இறக்குமதிசெய்வது கட்டாதென்று சொல்லப்படுகிறது.

## புதியபரீட்சகர்கள்சபை

கட்டணம்அறவிடாது பிரத்தியேகமாகநடைபெறும் தனிப்பட்டபாடசாலைகளில் கடமையாற்றுகின்ற ஆசிரியர்கள் பரீட்சகர்களாகச் சேவைசெய்ய உரிமையுடையவர்கள் அல்லவென்று கல்விமந்திரிகாரியாலயம் தீர்மானித்திருக்கிறது. அதனால் மார்கழிமாதப் பரீட்சைகளுக்கென்று நேரகாலத்துடன் புதியபரீட்சகர்கள் சபைஒன்றை நிறுவுதற்கான ஒழுங்குகள் இப்போது செய்யப்படவிருக்கின்றன.

## சிங்களமும் சம்பளமும்

அரசாங்கசேவையில் தொடர்ந்து கடமையாற்ற விரும்புகிற 55வயதுநிரம்பிய அரசாங்கஊழியர்களே, உத்தியோகமொழியாகிய சிங்களத்திலே எவ்வளவுதூரம் தேர்ச்சிபெற்றிருக்கிறீர்கள்? இந்தக்கேள்விக்கு இறுக்கும் பதிலைக்கொண்டுதான் அவர்களின்சேவைகாலத்தைநீடிப்பதுபற்றிய சிபாரிசுசெய்யப்படும். 55 வயதுக்குட்பட்ட அரசாங்கஊழியர்கள் உத்தியோகமொழியில் போதிய தேர்ச்சிபெறுவிடின் அவர்களுக்குச் சம்பளஉயர்வு அளிக்கப்படமாட்டாது.

## கல்லோயா 'றம்' குடிவகை

கல்லோயா அபிவிருத்திச்சபை இவ்வருடத்திலே போத்தல் ஒன்று இரண்டுரூபாவீதம் பத்துஇலட்சம் போத்தல றம்குடிவகையை மதுபரிபாலனபகுதிக்குக் கொடுக்கும்; மதுபரிபாலனபகுதி போத்தலொன்றுக்கு எட்டுரூபாவரிவிதித்து அதனைப்பத்துரூபாவீதம்விற்கும்; இதன்மூலம் மதுபரிபாலனபகுதி பத்துஇலட்சம் போத்தல்களுக்கும் எண்பதுஇலட்சம் ரூபா இலாபம்அடையுமென எதிர்பார்க்கின்றது; 1963-ம்ஆண்டிலே கல்லோயா அபிவிருத்திச்சபை 30 இலட்சம்போத்தல் றம் உற்பத்திசெய்யும்; அதனால் மதுபரிபாலன பகுதிக்கு 5கோடிரூபா வருமானம் கிடைக்குமென மதிப்பிடப்படுவதாக விவசாய-காணிமந்திரி சனப்பிரதிநிதிகள்சபையிலே தெரிவித்திருக்கின்றார்.

## வெளிநாடு செல்லுகின்றார், ஏன்?

இலங்கையிலே பிரபலமிக்க ஒரு சிவிலுத்தியோகஸ்தராயிருந்து இளைப்பாறியவரான திரு. ரி. டபிள்யு, றெபேட்ஸ்அவர்கள் பிரித்தானியில் போய்க் குடியேறுவதற்காக இலங்கையிலிருந்து வெளியேறுகின்றார். அவர் காலியிலே சென்றவியாழக்கிழமை அருளப்பட்ட ஒருபிரியாவிடைவிருந்தில் பேசுகையில் கூறியதுவருமாறு: நான் காலியில் ஏறக்குறைய முப்பதுவருடகாலம் சஞ்சரித்திருக்கிறேன். எனதுவாழ்க்கையில் மகாபாக்கியமான வருடங்கள் இவைகளாகும். கடந்தகாலங்களில் இருந்ததுபோன்று இலங்கையிலே தற்போது வாழ்க்கைநடத்துவது சுதந்திரமானதல்ல என்று நான் கண்டுள்ளேன். தனதுபிள்ளைக்கு என்னமாதிரியானபாடசாலை நல்லது; என்னமொழி அப்பிள்ளைபடிக்கவேண்டுமென்று ஒருவருக்குச் சொல்லும் அளவிற்கு அரசாங்கம்போய்விட்டது. வரியும் மிகப்பளுவாகிவிட்டது நான் இலங்கையைவிட்டுவெளியேறுவதற்கும், பிரித்தானியஇராச்சியத்தில் போய்க் குடிபதியாவதற்கும் தீர்மானித்தமைக்குக் காரணங்கள் இவைகளே. நான் சுதந்திரமாகப் பிறந்தேன். ஒரு சுதந்திரமனிதனாக இறக்க நான் ஆசிக்கிறேன். மேல்நாடு என்னை அழைக்கின்றது. நான் போகவேண்டியது தான்.

## வெளிநாட்டுச் செய்திகள்

● ஜப்பானின் அநேகப்குதிகளிலே சென்றசனிக்கிழமை பெய்த மழையிலே முன்னிலும்அதிகமான கதிரியக்கமும், ஆகாயத்தூசியும் தேசமுழுவதிலுமே காணப்பட்டதாகப் பரமாணுசாஸ்திர ஏஜென்ஸிஅதிகாரிகள் ரோக்கியோநகரிலே மறுநாள் ஞாயிற்றுக்கிழமை தெரிவித்திருக்கிறார்கள்.

● அணுஆயுதஉற்பத்திக்கென்று அமெரிக்கா 200கோடிடலர் மேலதிகமாகச் செலவுசெய்திருக்கிறது; தனதுபடைகளையும் பலப்படுத்திவருகின்றது; பேர்ளின் சுதந்திரத்தைப் பாதுகாப்பதற்காக அவசியமானால் அணுஆயுதத்தை உபயோகிக்க ஐனதிபதிகென்னடி தயங்கமாட்டாரென்று அமெரிக்க அற்றோர்ணி-ஜெனறல் ஓர்ரெலிவிஷன் பேட்டியில் தெரிவித்திருக்கின்றார்.

● ஆயுதங்களினால் பாதுகாக்கப்பட்ட வாகனங்கள் ஜேர்மனியிலுள்ள அமெரிக்கஇராணுவத்திற்கு இன்னும் ஐந்துமாதங்களிலே பூரணமாகக்கொடுபடவிருக்கின்றன. யுத்தம்நடைபெறும் இடங்களுக்குப் பாதுகாப்பாகவும், அவசரமாகவும் போர்வீரர்களை ஏற்றிச்செல்லக்கூடியதாய் இந்தவாகனங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

● அமெரிக்கஜனாதிபதி ஜோண் கென்னடிஅவர்கள் சென்ற 25-ந்திகதியன்று ஐக்கியநாடுகளின் பொதுச்சபையில் பேசியபோது: அடுத்தபத்தாயிரம்ஆண்டுகளுக்கு மனிதனின் தலைவிதியை அடுத்தபத்துமாதங்களில் நடைபெறவிருக்கும் சம்பவங்கள் நிர்ணயிக்கக்கூடியனவாய் இருக்குமெனக் கூறியிருக்கின்றார்.

● அமெரிக்கஜனாதிபதியைத் தொடர்ந்து மறுநாள் 26-ந்திகதியன்று ருஷியவெளிநாட்டுமந்திரி அன்டறி குறோமிக்கோ ஐ. நா. பொதுச்சபையில் பேசியபோது; "யுத்த அபாயத்தின் கடுக்களனுக மேற்கும் பேர்ளின் ஆகிவிட்டதெனக் கூறலாயினர்.

● முதலாவது ருஷியவானவெளிவீரரான மேஜர்யூரி ககாறின் நிகழும் ஐப்பசிமாதம்31-ந்திகதியன்று இலங்கைக்குவந்து இங்கே நான்குதினங்கள் தங்கவிருக்கின்றார். ருஷியாவின் இரண்டாவதுவானவெளிவீரருக்கும் இலங்கையிலிருந்து அழைப்பு விடுக்கப்பட்டிருந்தும் வசதியீனம்காரணமாக அவரால் வரமுடியவில்லையாம்.

● ஸ்பானியதேச அரசாங்கதலைவரான ஜெனறல்பிறங்கோ தாம்அதிகாரத்துக்குவந்த 25-ம்ஆண்டுநிறைவுவிழாவைச் சென்றஞாயிற்றுக்கிழமை அங்கு பேர்கோஸ்நகரிலே ஐம்பதினாயிரம் மக்கள் குழுமியிருந்த சமூகத்தில் குதூகலமாகக்கொண்டாடினார். பேர்கோஸ்நகரில்தான் ஜெனறல்பிறங்கோ 1936-ம் ஆண்டு அரசாங்க தலைவராகத் தமது ஆட்சியைத் தொடக்கினர்.

## தேசீய கல்விச்சபை

கல்விமந்திரி காரியாலயம் தேசீய கல்விச்சபைஒன்றை அமைக்கவிருக்கின்றது. கல்விஅபிவிருத்திசம்பந்தமான கருமங்கள்சகலத்திலும் கல்விமந்திரிகாரியாலயத்திற்கு ஆலோசனை கூறுவதே இதன்கடமையாகும். கல்விசம்பந்தப்பட்ட பல்வேறுகிளைகளினதும் பிரதிநிதிகளாக இச்சபைஅங்கத்தவர்கள் தெரிவுசெய்யப் படுவார்கள். சமயஸ்தாபனங்களும் இதிலே பிரதிநிதித்துவம் அருளப்படவேண்டுமா என்பதுபற்றியும் கல்விமந்திரி காரியாலயம் ஆலோசித்துவருகிறது. ஆனால், இதுவிஷயமாய் இன்னுமே ஓர் தீர்மானமும் செய்யப்படவில்லை. சபைஅங்கத்தவர்கள் ஐந்துவருடகாலத்துக்குப் பதவிவகித்திருப்பார்கள். பின்னர்இவர்கள் திரும்பவும் நியமனம் பெறமுடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தின்சரி பூசை வழிகாட்டி

### ஐப்பசி மாதம் 1961

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 8 | ஞா. | 2 | **பெந்தெக்கோஸ்தின்பின் 20-ம் ஞாயிறு** | (வி. ம.) | ப. |
| 9 | தி. | | அர்ச் லெயோனுடி அருளப்பர் (அர்ச். தியோனிசியார் தோழர் ஞா.) | | வெ. |
| 10 | | | செ. அர்ச் பிரான்சீஸ்கு போர்ஜியர் | | வெ. |
| 11 | பு. | 2 | **கன்னிமரியம்மாளின் தேவதாய்மைத் திருநாள்** | (வி. ம.) | வெ. |
| 12 | வி. | ம. | காலதினம் (ஞாயிறுபூசை) | | ப. |
| 13 | வெ. | | அர்ச். எற்வேட் | | வெ. |
| 14 | ச. | | அர்ச். கலிஸ்தார் | | வெ. |

சத்திய வேத
பாதுகாவலன்
1961-ம் ஆண்டு
ஐப்பசிமாதம் 7-ந் திகதி

## கட்டுப்பாடு வேண்டும்

நமதுஎதிர்காலம் இருள்சூழ்ந்ததாய்க் காட்சியளிக்கும் இன்றைய நிலைமையிலே நாம் என்னசெய்யவேண்டும்? எவ்விதம் நடந்துகொள்ளவேண்டும்? என்று தமிழ் மக்களின் எதிர்காலவாழ்க்கையையிட்டுக் கவலைகொள்ளுகின்ற தமிழ்ப்பெரியார்கள்பலரும் அருமருந்தன்ன ஆலோசனைகளையும், அருமையான நன்மதிகளையும் எடுத்துக்கூறிவருகின்றனர்கள். பொருளாதாரத்தில் நாம் பின்தங்கியமைக்குக் காரணம்என்ன? நமதுஎதிர்காலத்தின் நிச்சயமற்றநிலைமைக்குக் காரணம்என்ன! அரசாங்கஉத்தியோகமே நமதுஇலட்சியமாக அமைந்தமையே, தமிழ்மக்கள் அரசாங்க உத்தியோகங்களில் அமர்ந்து உயர்ந்தவேதனங்கள்பெற்று ஆடம்பரவாழ்க்கை நடாத்தியகாலம் மலையேறிவிட்டது. அதனுல் அவர்கள் சொகுசானஉத்தியோகங்களில் நாட்டங்கொள்வதைவிடுத்துக்காலத்திற்கேற்றகோலமாய்த் தற்போதைய நிலைமைகளைச் சரிவர உணர்ந்து தங்கள்எதிர்கால நலன் கருதித் தொழில்துறைகளில் தங்கள்கவனத்தைத் திருப்பவேண்டியகாலம் வந்திருக்கிறது. ஆடம்பரவாழ்க்கையை—அனுவசியசெலவுகளை அறவேஒழித்துக் கட்டுமட்டாயும், சிக்கனமாயும் வாழ்ந்து தங்கள்பொருளாதார அபிவிருத்தியில் கவனத்தைச் செலுத்தவேண்டியகாலம் பிறந்திருக்கிறது. அதனுல் தமிழ்ப்பிரதேசத்திலுள்ள ஒருஅங்குலநிலமாவது, எந்தமூலப்பொருளாவது, கைவசமுள்ள எந்தப்பொருளாவது வீணுகாமல் விழிப்பாயிருக்கவேண்டியதுதான் தமிழ்மக்கள் இந்த வேளை கடைப்பிடிக்கவேண்டிய வழியாகும்.

சிக்கனமான — கட்டுமட்டான வாழ்க்கையைப்பற்றிப் பேசுவது பலருக்கும் கசப்பை உண்டுபண்ணலாம். காரணம்,அவர்கள் சிக்கனமற்ற—கட்டுமட்டில்லாத ஆடம்பரவாழ்க்கையில் இலயித்துப்போய்விட்டமையே. தன்னைச்சூழவரப் பெருஞ்சுவாலையாக அக்கினிமூண்டெரிந்தாலும் அயராது துயில்கொள்ளும் மலைப்பாம்பைப்போல் இவர்களும் தங்களையும், தங்கள்சமுதாயத்தையும் சூழ்ந்துகொண்டிருக்கும் அபாயநிலைமையைக் கண்டும் காணுதவர்கள்போல் — அதையிட்டுக் கிஞ்சித்தும் அக்கறைகொள்ளாது கண்ணயர்ந்தவர்கள்போல் காணப்படுகின்றனர்கள். இது பெற்றோர் தேடிவைத்துப்போன பொருள் தானேயென்று அதனை ஒருபொருளாய்மதியாது, இது சுயமுயற்சியால் தேடிக்கொண்ட பொருள் தானேயென்று ஒருபொருட்டாய் அதைமதியாது விழலாக அவைகளை விரயஞ்செய்வதால் தங்கள்பொருள் வளம் அழிவதைப் பலர்நினைப்பவர்களாயில்லை. பார்க்க உத்தியோகமில்லாது, பிழைக்க வகையில்லாது, சீவனத்துக்குப் பாதையில்லாது எத்தனையோ மக்கள் தவிக்கக் கண்டும்—வரியேற்றம்காரணமாக வாழ்க்கைச்செலவு அதிகரிக்கக் கண்டும்—பலவழியாலும் பணவருவாய் குறையக்கண்டும் — படித்த இளைஞர்கள்பலரும் வேலையில்லாது குடும்பங்களுக்குப்பாரமாய் இருக்கக்கண்டும் எதிர்காலம்பற்றிய சிந்தனை எட்டுணையுமேயில்லாது முன்போலவே படக்காட்சிகளிலும், விளையாட்டு வினேதங்களிலும், இடாம்பீகவாழ்க்கையிலும், மதுபானத்திலும், களியாட்டத்திலும் ஆடம்பரமாகநடாத்தும்கலியாணங்கள், விழாக்கள், இழவுகாரியங்களிலும், ஊர்சுற்றிப்பார்ப்பதிலும், உல்லாசப்பிரயாணத்திலும் பணத்தை விருதாவிலே செலவு செய்யும்போது பொருளாதாரவளம் பெருகுவதுஎங்ஙனம்?

"உழைப்பனவிலும் ஒறுப்பனவே மேல்" என்றசுலோகம் இன்று எம்மவரிடையே வழக்கற்றுப் போய்விட்டதோ என்றுதானும் சிந்திக்க வேண்டியிருக்கிறது. நமதுமக்கள் எதிலும்ஒறுப்பனவாய், எதிலும் சிக்கனமாய், எப்போதுமேசெட்டாய்ச் சீவித்துவந்தகாலம் இப்போதுள்ள பாட்டன்பாட்டிகளுடன் இறுதிகண்டு விடும்போல் இருக்கிறது. குடும்பசெலவுசித்தாயங்களிலே கட்டுப்பாடில்லை; பொருள் பண்டங்களைச் சிந்திக்கொட்டிச் சிதறுசன்னமாக்குவதல்லாது சேமித்துப்பக்குவப் படுத்துவதிலே கட்டுப்பாடில்லை; போசனபானுதிகளில் கட்டுப்பாடில்லை; உடைநடை பாவனையிலே கட்டுப்பாடில்லை; வீடுகளைக்கட்டுவதிலே "சிறுகக்கட்டிப் பெருகவாழ்க" என்ற கட்டுப்பாடில்லை; பாடசாலைப்பிள்ளைகளென்றல் அவர்கள் புத்தகங்கள், மற்றும் உபகரணங்களைப் பக்குவமாகப் பேணுவதில்கட்டுப்பாடில்லை; ஆலய வழிபாடுகளிலே கட்டுப்பாடில்லை. உழைப்பிலே கட்டுப்பாடில்லை; அதனுல்எல்லாம் அழிநாடாகிக்கொண்டு வருகிறதேயென்று காலங்கண்ட பெரியார்கள்பலரும் சொல்லக்கேட்கும்போது எவர்தான்மனம் வருந்தாதிருக்க முடியும்? ஆகவே, கட்டுப்பாடுகளுக்குக் கட்டுப்படாது வாழ்க்கைநடத்துகிறவர்களின் கதியாதாகும்? அவர்கள் கடன்பட்டு, பலவழியாலும் கஷ்டப்பட்டு, தரித்திரத்தின் வாய்ப்பட்டுக் குட்டிச் சுவராகுவதே. நமதுமக்களின் எதிர்கால வாழ்க்கையைப்பற்றிச் சிந்தித்து அங்கலாய்க்கின்ற இச்சந்தர்ப்பத்திலே கற்றஇளைஞர்கள் பலரும் கூட்டுறவுமுறையிலே பரந்தன், கிளிநொச்சிமுதலாம் பலவிடங்களிலும் காணிபெற்றுக் காடுவெட்டிக் கமத்தொழிலிலும், கோழிப்பண்ணைகள் நடாத்துவதிலும் ஊக்கமாகஈடுபட்டுப் பலனடையத்தொடங்கியிருக்கிறர்களென அறியவருவது ஓர்சந்தோஷசெய்தியாகும்.

### சிந்தனைக் கதிர்

— 3 —

சிறந்தமுறையில், இறைவனின்வழியில் காலத்தைச் செலவிடுவது எங்ஙனம்? அருள்நிறைந்தநிலையில் எமதான்மா விளங்குவதே ஆரம்பபடி. பாக்கியமான இந்நிலையிலிருந்த வண்ணம் நாம்தலையிடும் ஒவ்வொருசெயலும் கடவுளின் சந்நிதிக்கு மிக உகப்பானதாகும். பாவநிலையில், நற்செயல்களில் ஈடுபடுவதிலும் இது எவ்வளவோ மாறுபாடானது.

இந்நிலையில் தொடர்ந்து விளங்கவேண்டுமாகில், எமதுவாழ்க்கை திட்டமிடப்பட்டதோர் வழியில் செலுத்தப்படுதல் அவசியம். ஒவ்வொருவரினதும் வாழ்க்கைக்கு ஒருகுறிக்கோள் வேண்டும். பலர் காலத்தை வீணுக்குவதற்குக்காரணம் திட்டமில்லாததேயாகும். எங்கே செல்வதென்பதை அறியாதவர்கள் எங்ஙனம் வெற்றியடையக் கூடும்?

வாழ்க்கையில் இக்குறிக்கோள் இல்லையேல் கடலில்கொந்தளிக்கும் அலைகளைப்போல மேலும்கீழும் தத்தளித்துக்கொண்டிருப்பதில் நமது காலம் கழியும். இங்ஙனம் நமதுகாலம் கழிந்தபின் நித்தியத்தின் வாயிலை அடையும்போது எமதுமுயற்சிகட்கு எவ்விதபயனையும் காணுதவர்களாகப் பரிதாபகரமாக விழிக்கநேரிடும்.

பழகிய புறுஒன்றை வானத்தில் பறக்கவிடுங்கள். எவ்வளவு நிச்சயத்துடன் அது வீடுநோக்கி வருகின்றது. அதுபோல எங்கேபோக வேண்டும்என்பதை நாம் ஏற்கனவே திட்டமிட்டுவிட்டால் எமது காலம் வீணுகக் கழியாது.

(சா. பெ.)

# இஸ்பிரீத்துசாந்து திருநாளுக்குப் பின்வரும் 20-ம் ஞாயிறு

(சுவாமி மைக்கல் ரொட்ரிக்கோ)

தமிழாக்கம்: பே. இ. மனவேல்

"சோதனையில் நீயும் அகப்படாதபடிக்கு உன் மட்டில் கண்ணுயிரு" என்று பவுல் அப்போஸ்தலர் கூறுகிறர். எங்களுடைய வாழ்க்கையில் இக்கட்டு இடைஞ்சல்கள் வந்து சேருவதை நாம் காணலாம். சென்ற ஞாயிற்றுக்கிழமை நாங்கள் கிறிஸ்துவின் மணவாட்டியாகிய திருச்சபையின் அங்கங்கள் என்று உணர்ந்து அவரோடு ஒன்றிக்கிறேம் என அறிந்தோம். நாங்கள் அவரின் பரிசுத்த மக்களாய் இருந்தாலும், பாவிகள் என்பதை மறக்கமுடியாது. ஆகவே, எங்களுக்குப் பரிசுத்ததனம் அவசியம் தேவை. 'நேரமோ மீட்கப்படவேண்டும்; ஏனெனில், நாட்கள் பொல்லாதவைகளாய் இருக்கின்றன.' ஆகவே, நாங்கள் தேவனுக்கு உகப்பான சீவியத்தை நடாத்த வேண்டும். இதுவே, இன்றைய பூசையின் பொருளை விளக்குகின்றது.

### செபமும் போதனையும்

பிரவேச வாக்கியம் தானியேல் தீர்க்கதரிசியின் புத்தகத்திலிருந்து எடுக்கப்பட்டன. இச்செபம் எரியும் சூளையிலிருந்த மூன்று - சிறுவர்களைப் பற்றி நினைவூட்டுகின்றது. இந்த அசாரியாசின் செபம் இன்றையத் திருச்சபையினதும், அடிக்கடி அநேக வருடங்களாகக் கஷ்டப்பட்டுச் சோதிக்கப்பட்டுக் கடைசியில் சுடர்விட்டெரியும் நெருப்பின்மூலம் பரிசுத்தமாக்கப்பட்ட ஆத்துமத்தின் செபமாகவும் தோன்றுகின்றது. எனவே, நாங்கள் நீதியின் நிமித்தம் அவருடைய இரக்கத்தை இரந்து கேட்போமாக. நாங்கள் பாவத்தைச் செய்து கடவுளின் கட்டளையை மீறினேம், ஆகவே, நாங்கள் சோதனையில் பிரவேசிக்காவண்ணம் அவரை இரந்து மன்றுடுவோமாக. பொன் நெருப்பில் போட்டுச் சுத்தமாக்கப்படுகின்றது; மருத்துவனும் நோயாளியைக் குணப்படுத்துவதற்காகவே உடலை வெட்டுகிறுன். அதேபோல் நாம் துன்பமின்றிப் பரிசுத்தராக முடியாது என்று சபைச் செபம் கூறுகின்றது. நிருபம் எங்களை ஞானிகளாய், நேரத்தை மீட்கும்படி கூறுகின்றது. ஏனெனில், நாட்கள் பொல்லாதவைகளாய் இருக்கின்றன. கடவுள் நடுமையம்; நன்றித்துதியையும், புகழையும் நிருபம் தெளிவாக எடுத்துரைக்கின்றது. இது தன்னலமுடைய சீவியத்திற்கு மாற்று மருந்தாகின்றது. மனதாலும், இருதயத்தாலும், வாயினுலும் கொடுக்கும் புகழ் குற்றமற்ற, தகுதியுள்ள வெளிக்காட்டுதலாக இருக்க வேண்டும். உண்மையான கிறிஸ்துவ சீவியமே மிகச் சிறந்த செபம் என்று பேதுரு வானவரின் தற்போதைய பிரதிநிதி கூறுகின்றர். நேரத்தை நேர்மையான சீவியத்தின் மூலமாகவே திரும்பவும் அடைந்து கொண்டாலும், விசுவாசத்திலும், தேவசிநேகத்திலும், நம்பிக்கையிலும் பார்க்க மேலாக எதனுல் நாம் அதை அடைந்து கொள்ளலாம்? சுவிசேஷம் கப்பர்னும் ஊரில் உள்ள ஓர் இராச உத்தியோகத்தனுடைய மகன் குணமாகியதைக் கூறி எமக்கிருக்க வேண்டிய இந்த விசுவாசத்தின் ஆழத்தையும், தேவன் விசுவாசம் இல்லாமையை எப்படி வெறுக்கின்றர் என்பதையும் வெளிப்படுத்துகிறது. ஆரோகணகீதம் தேவனில் சீவன்களின் முற்றுன நம்பிக்கையைச் சற்பிரசாதத்திருநாளிலிருந்து எடுத்துக்காட்டுகிறது. அல்லேலூயாகீதம் எங்கள் இருதயங்களின் ஆயத்தத்தைக் கூறுகிறது.

### நற்கருணைத் திருச்சடங்கு

இரட்சகரே நேரத்தை மேற்கொள்ளுகிறர்; அவரே நாங்கள் நேரங்களை மேற்கொள்ள உதவிசெய்வார். காணிக்கைக் கீதத்தில் எங்களுடைய கடந்த நினைவுகளைப் 136-ம் சங்கீதத்தோடு ஒன்று சேர்ப்போம். "பாபிலோன் நதிகளின் அருகே நாங்கள் உட்கார்ந்திருந்து அங்கே சீயோனே! உன்னை நினைந்து அழுதோம்," விரைவில் நித்தியத்தின் தேவன் தியாகத்தோற்றத்தில் எங்கள் முன் தோன்றுவார்; நினைவுகள் நேரத்தோடு தொடர்பு கொண்டிருக்கின்றன; ஆகவே, எங்கள் நினைவுகளை அவருக்கு ஒப்புக்கொடுப்போம்; கிறிஸ்து தமது உண்மையான தோற்றத்தில் இவைகளை எல்லாம் பரிசுத்தமாக்குவார்; நித்தியமாய்ப் பலியாக்கப்பட்ட செம்மறிப்புருவை வசீகரப் பகுதியில் தோற்றமளிக்கும்போது தான் எனக்கு நித்தியம் மெய்யாகவே தோற்றமளிக்கின்றது; இதுவே எனது ஆழ்ந்த தியானமாக இருக்கவேண்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கத்தோலிக்க செய்திகள்

## எதிர்பாராத சந்திப்பினால் லூர்து செல்லுகிறார்

கடந்த 10 ஆண்டுகளாக நடமாட முடியாமல் சில்லுக்கதிரையில் காலத்தைக் கழித்தவரான திரு. கிறிஸ்தோப்பர் மாகர் உண்டிச்சாலையொன்றில் பெற்ற எதிர்பாராத சந்திப்பின்விளைவாக லூர்து திருசேத்திரத்துக்குச் செல்லுகிறார். திரு. மாகர் கட்டடம் ஒன்றைக் குலைக்கும் வேலையில் ஈடுபட்டிருந்தபோது ஓர் இரும்புவலை அவர்மேல் தவறி விழுந்து 60 அடி உயரத்திலிருந்து அவரை வீழ்த்தியது. லிங்கன் கிராமத்து உண்டிச்சாலை ஒன்றில் திரு. பற்றிக் கம்பெல் என்பவரைச் சந்தித்தார். சந்தித்த சிநேகிதர் லூர்துபதிக்குத் திரு. மாகர் போக விரும்புகிறாரா என்று வினவியதற்குத் தாம் எப்போதும் அந்த ஆசையைக் கொண்டிருந்ததாகத் தெரிவித்தபொழுது, அவரை நிச்சயமாக அனுப்பி வைப்பதாகத் திரு. கம்பெல் வாக்களித்தார்.

அன்று இரவு உண்டிச்சாலையில் திரு. கம்பெல் ஒரு விளையாட்டுப் போட்டியையும், தமது சகதொழிலாளருடன் இன்னொரு விளையாட்டுப் போட்டியையும் நடாத்தி 100 பவுண் சேர்த்தார். எழுத்தாளரான திரு. பல்டர்சன் திரு. மாகரைத் தமது காரில் ஏற்றிச் செல்வதாக உறுதி கூறினார். செண். ஜோண்ஸ் அம்புலன்ஸ் படையின் பகுதிதலைவர் திரு. ஸ்கொட் தமது ஓய்வில் ஒருவாரத்தைவிட்டுத் திரு. மாகர் செல்லவிருக்கும் பயணத்தில் அவரைப் பராமரிப்பதற்குச் சம்மதம் தெரிவித்தார்.

## ஞானஸ்நானப் பொருட்காட்சி

கடந்த புரட்டாசித்திங்கள் 29ஆம் நாள் வெள்ளிக்கிழமைமுதல் ஞாயிறு ஈருக யாழ்ப்பாணம் ஆசனக்கோவிற் பங்கிலே சிறந்தவொரு ஞானஸ்நானப் பொருட்காட்சி நிகழ்ந்தது. பொருட்காட்சிவிழாவின் ஆரம்பமாக வெள்ளிக்கிழமை பிற்பகல் 5-30மணிக்கு ஆசனக்கோவிலில் கொழும்புத் துறைப் போதனா கல்லூரிஅதிபர் வண. வ. தியோகுப்பிள்ளை அடிகளாரால் தமிழிலே ஞானஸ்நானம் பகிரங்கமாகக் கொடுக்கப்பட்டது. தொடர்ந்து திவ்விய சற்பிரசாத ஆசீர்வாதம் நிறைவேறியது.

காட்சிமண்டபத்தைச் சம்பத்திரிசியார்கல்லூரி அதிபர்சுவாமியார் திறந்து வைத்தார். "மகனே! ஞானஸ்நான நீரிற்குதித்தல் கிறிஸ்துவில் அமிழ்தல்" என்னும் பொன்மொழியைச் சித்தரிக்கும் வண்ணப்படமொன்று புகுமுக வாயிலில் மக்களைவரவேற்று உள்ளே செல்ல வழிகாண்பித்தது. மண்டபத்தினுள்ளே ஞானஸ்நானத் தேவதிரவிய அனுமானத்தின் தன்மைகளையும், நன்மைகளையும், தத்துவ உண்மைகளையும் தெளிவுபட எடுத்துரைக்கும் ஏராளமான காட்சிப்பொருள்கள் நிரைக்கப்பட்டிருந்தன.

சிறப்பாக, ஞானஸ்நானம் பெறுபவனுக்கும், கிறிஸ்துவுக்கும்இடையே இருக்கும் ஒன்றிப்பைவிளக்கும் ஓவியங்களும், ஞானஸ்நானத் திருச்சடங்கைத் தெளிவுபடுத்தும் பிரதிமைப் படங்களும், "ஞானஸ்நானம் ஒரு தெய்வீகமாற்றம்" என்பதைப் புலப்படுத்தும் மாதிரிஉருவக் காட்சியமைப்பும், ஞானஸ்நான உடைகளும் பொருட்காட்சியில் பிரதான இடம் வகித்தன.

காட்சிப்பொருள்களின் விளக்கம் அட்டைகள்மூலமாகவும், சொற்பொழிவுகளின் வாயிலாகவும் எடுத்துரைக்கப்பட்டன. பொதுமக்களும், பாடசாலை ஆசிரியர், மாணவர்களும் திரள் திரளாகச் சென்று காட்சியிற்பங்குபற்றி நல்லறிவுபெற்று மீண்டனர். தினமும் மாலைவேளையில் ஆசனக்கோவில் முன்றிலில் கிறிஸ்துநாதரின் வாழ்க்கையைச் சித்திரிக்கும் ஒளிப்படமும் காண்பிக்கப்பட்டது.

இறுதிநாளாகிய ஞாயிறுபிற்பகல் 5-30மணிக்கு ஆசனக்கோவிலில் நடந்தேறிய ஞானஸ்நானப் புதுப்பித்தற் சடங்கில் ஆயிரக்கணக்கான மக்கள் பங்குபற்றியநிகழ்ச்சி மிகவும் பக்தியருட்சிக்குரியதாயிருந்தது. முன்னேற்பாட்டின்படி ஞாயிறுதினம் முடிவெய்தவிருந்த காட்சியானது பலரின்ஏகோபித்த வேண்டுதலின் காரணமாய் மீண்டும் மூன்றுதினங்கள் பின்போடப்பட்டது. ஞானஸ்நானத்தைப் பற்றித் தனித்துக் காண்பிக்கப்பட்ட பொருட்காட்சி யாழ்ப்பாணச்சரித்திரத்தில் இதுவே முதன்முறையாகும் என்று கூறினும் மிகையாகாது. அழகும், அமைதியும், அருட்சியும் நிலவத்தக்க வகையில் உன்னதமான முறையில் அறிவுப்பயனளிக்கக் காண்பிக்கப்பட்ட இக்காட்சியின் இயக்குநர்களை மனமாரப் பாராட்டுகின்றோம்.

"விசேடநிருபர்"

## ஒற்றுமைக்கு முட்டுக்கட்டைகள்

கிறிஸ்துவ ஐக்கியக் காரியாலயக் காரியதரிசியான கருதினால பெயா, திருச்சபையுடன் புரட்டெஸ்தாந்தர் ஒற்றுமைப்படுவதற்கு நான்கு பெரிய தடைகளுண்டு என்கிறார். அவை யாவன:

- வேதபோதகத்தைப்பற்றியும், அதன் மாறாத்தன்மைபற்றியும் வேற்றுமையான கருத்து.
- திருச்சபையினதும், பாப்புவினதும் அதிகாரம்பற்றிய சிக்கல்கள்.
- ஒற்றுமைபற்றி வித்தியாசமான கருத்து.
- கத்தோலிக்கர் அல்லாதாருடன் கலந்தாலோசிக்க உத்தரவாதமுள்ள ஒருவர் இல்லாமை.

ஒற்றுமைக்காக உண்மையைக் கைநெகிழ முடியாத நிலைமை திருச்சபைக்கு உண்டு; எனினும், ஞானஸ்நானம் பெற்றதினால் திருச்சபையின் மக்களாயும், கிறிஸ்துவின் ஞான உடலின் உறுப்புக்களாயுமிருக்கின்றனர் கிறிஸ்துவர் என்பதை நினைவுறுத்துவது பிறசிநேகக் கடமையாகின்றது.

### உதாரம் அவசியம்

நடக்கவிருக்கும் பொதுச்சங்கம் பற்றிப் புரட்டெஸ்தாந்தர் கருத்தென்னவென்பதை அறிய, பட்சபாதமற்ற நோக்கு வேண்டும். ஒற்றுமைக்குத் தடையாயிருப்பவை எவையென நுணுக்கமாயும், தாராளமனதுடனும் நோக்கினால் அத்தடைகளை மேற்கொள்ள வழிகாணலாம்.

இவைகளை ஆலோசிக்குமிடத்து மனஞ்சோர்ந்து ஒற்றுமை முயற்சியைக் கைநெகிழவே மனம் வரும். மனித ஒத்துழைப்பும் திருச்சபையின் உதவியும் அவசியமெனினும், எமது முயற்சியிலல்ல, எல்லாம்வல்ல இறைவனின் அருளிலேயே நாம் நம்பிக்கை கொள்ள வேண்டும்.

* * *

## குடும்பக் கட்டுப்பாடும் ஐ. நா. ஸ்தாபனமும்

டென்மார்க்கும், சுவீடனும் சேர்ந்து "சனத்தொகைப் பெருக்கமும், பொருளாதார விருத்தியும்" எனும் பிரச்சினையை ஆராயுமாறு ஐ. நா. ஸ்தாபனத்தை உத்தியோகபூர்வமாகக் கேட்டிருக்கின்றன.

ஆனால், ஐ. நா. ஸ்தாபனத்தின் உணவு—விவசாயப் பகுதியானது உலகத்தில் உற்பத்தியாகும் உணவு உலக மக்களைப் போஷிக்கப் போதுமானது என வற்புறுத்தி வந்திருக்கிறது; அண்மையில் உணவுப் பஞ்சம் ஏற்பட எக்காரணமும் இல்லை எனவும் கூறுகிறது. இத்தாபனத்தின் உணவு உற்பத்திக்கான 5 ஆண்டுத் திட்டத்தில் கத்தோலிக்கர் ஒத்துழைக்கின்றனர்.

* * *

## டாக் ஹமஷீல்டுடன் இறந்தவர்களுக்கு இளைப்பாற்றிப் பூசை

ஐக்கியநாடுகளின் பொதுக்காரியதரிசி டாக் ஹமஷீல்டும், அவரது குழுவினரும் விமானவிபத்தில் உயிர் இழந்ததையிட்டு வடறொடிஷியாவின் ஞெடோல் ஆசனக்கோயிலில் ஓர் இளைப்பாற்றிப்பூசை ஒப்புக்கொடுக்கப்பட்டது.

* * *

## எலிக்கோப்டர் காப்பாற்றியது

காங்கோலிய படையினர் அந்நியர் மேல் பழிதீர்த்து வருகின்றனர். அண்மையில் மாஷாலா எனும் ஊரிலிருந்த குருக்களையும், கன்னியர்களையும் 'எலிக்கொப்டர்' எனும் விமானம் காங்கோலியரின் கொடுமையினின்று தப்புவித்தது. ஆனால், காங்கோலிய புதிய பிரதமர் சிரில் அதூலா பொதுவுடைமையின் சென்ம விரோதி. ஆகவே, கத்தோலிக்கர் மீண்டும் அரசின் அனுதாபத்தைப் பெறலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது. புரட்சி தொடங்கியதிலிருந்து, காங்கோவில் மருத்துவ, கல்வித் தாபங்கள் தாழ வீழ்ந்துவிட்டன. மேல்நாட்டு வேதபோதகர்களின் அவசியத்தை உணர்ந்துள்ளனர் காங்கோ மக்கள். ஆனால்,

ஒரு பெரும் ஆபத்து; 28பேர்கொண்ட அதூலாவின் அமைச்சர்அவையில் 11 லுமும்பா—சகாக்கள் உள்ளனர். இவர்கள் பொதுவுடைமையுடன் கொண்டுள்ள பெரும் தொடர்பு ஆபத்தை விளைவிக்கத்தான் செய்யும்.

## "பிரிவினைச் சகோதரரிடை புனிதர்உளரா?"

"புரட்டஸ்தாந்தரிடை பரிசுத்ததனம் பரந்திருக்கிறதெனினும், தேவ அருள் வழிகளைக் கொண்டுள்ள திருச்சபைக்குப் புறம்பே அது நிறைவுடன் பரந்திருக்க முடியாது" என்றார் றோமைக் கிறகோரியார். சர்வகலாசாலை வேதசாஸ்திரப் பேராசிரியரும் வேதபோதக வழி வல்லுனருமான வண. கிறஸ்ஸோ, யே.ச. சுவாமிகள், "பிரிவினைச் சகோதரரிடை புனிதர் உளரா?" எனும் விடயம்பற்றி அண்மையில் பேசியபொழுது மேற்கண்டவாறு குறிப்பிட்டார். இவருடைய உபந்நியாசத்தைக் கேட்டவர்களில் 3 கருதினால்மாரும், பாப்புவின் அந்தரங்க காரியதரிசியும் இருந்தனர்.

### பரந்த புனிதம்

தொடர்ந்து பேசுகையில், பரிசுத்ததனம் திருச்சபை அறிகுறிகளில் ஒன்று; அது பிறர்நலத்துக்காகக் கொடுக்கப்படும் தேவகொடையையே குறிக்கும் பொதுப் பரிசுத்ததனமும் அதன் சில சிறப்பான அம்சங்களும் புரட்டெஸ்தாந்தரிடையே உண்டு. இதைத் துறவறவாழ்வைக் கைக்கொள்கிறவரிடமும், ஞான அப்பியாசங்களை அனுசரிக்கிறவரிடமும், பிறநாடுகளில் சுவிசேஷத் தொண்டு புரியச் செல்கிறவரிடமும் காணலாம். எனினும், மகாத்துமாக்களையோ, அற்புதவரத்தரையோ, அதாவது பிறர்நலத் தேவகொடை பெற்றவர்களைப் புரட்டெஸ்தாந்தரிலே காட்டமுடியாது.

### உண்மைக் காரணம்

ஜேர்மனியரான ஜெறூர்ட் டேர்ஸ்டீகனையும், சுவிற்செலாந்தவரான அடெல் கம் அம்மையாரையுஞ் சுட்டிக்காட்டி, அவர்கள் உயர் புனிதமடைந்தவர்களெனக்கூறி, புரட்டெஸ்தாந்தரில் வீரப்புனிதம் இல்லாமைக்குக் காரணம், திவ்விய நற்கருணை இல்லாததேயெனக் குறிப்பிட்டார். ஆனால், இப்பொழுது அவர்கள் தேவதிரவிய அனுமானங்களை உபயோகிக்க, சிறப்பாக நற்கருணைப் பக்தியிலும், தேவ அன்னைப்பக்தியிலும், சந்நியாசசபைகளுக்கு அத்திவாரமான துறவறவாழ்க்கையிலும் மிகுந்த ஆவல் கொள்ளுகின்றனர்.

டும்; அனுபவிப்புப் பகுதியில் தேவன் என்னிடம் வரும்பொழுது மூன்று காலங்களும் ஒன்றுகின்றன; நித்தியத்தின் தேவன் தன் வாக்குத்தத்தத்தை எனக்கும் திருச்சபைக்கும் நிறைவேற்றும்பொழுது எனக்கு மறுமையில் நம்பிக்கை அளிக்கின்றார். "தேவரீர் உமது தாசனுக்குக் கொடுத்த நம்பிக்கை வாக்கை நினைந்தருளும். இந்த நம்பிக்கையின் இருப்பிடத்தில் நான் இழந்த நேரத்தையும் வீணகச் செலவழிக்க நேரிடும் நேரத்தையும் மீட்க வேண்டும். நேரம்தான் நித்தியத்தின் விதை; ஆகவே, நான் சென்றவைகளையும், நடக்கின்றவைகளையும், நடக்கப்போகின்றவைகளையும் முறையே கிறிஸ்துவின் இரக்கத்திலும், அன்பிலும், சித்தத்திலும் உருவாக்க வேண்டும்.

## நேர்த்தியின் பூர்த்தி

மரியாயின்பிள்ளை ஒருபோதும் கைவிடப்படமாட்டான் என்றஉண்மை எனது வாழ்க்கையில் தெளிவாயது. எனது தாயாரின் அந்தியவேளை அவவின் அருகில் இருந்து எனதுகடமையை நிறைவேற்ற வேண்டுமென்ற ஆவலினால் உந்தப்பட்டு எனது சுயஊருக்கு உத்தியோகமாற்றம் கிடைக்கவேண்டுமெனப் பரி. சதாசகாய அன்னையை இரந்துவந்தேன். யாவும் சுமுகமாக நிறைவேறியது. எனதுவிருப்பும் பூர்த்தியானது. அவவுக்கு எனது தாழ்மையான நன்றி. இன்னும் எங்கள் ஆபத்துவேளைகளில் அவவின் சலுகையை இரந்து, நேர்த்திப்படி பிரசுரிக்கிறேன்.

ஏ. ஜே. டயஸ்

பொலிஸ் ஸ்ரேசன்,

அநுராதபுரம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இளைஞர் பக்கம்

# செபமாலை மாதாவின் மாதம்

செபிப்போம், செபமாலையை விடாமற் செபிப்போம். ஏனென்றால் செபமாலைமாதாவின் மாதம். பரிசுத்த செபமாலை இராக்கினியின் திருநாளன்று நாம் செபமாலையைப் பக்தியோடு சொல்லி அதை மலர்மாலையாக அவளுக்கு அளிக்கவேண்டும். செபமாலைமாதா நம்மிடத்தில் கேட்பதென்ன? செபமாலை சொல்லுங்கள்; விடாது சொல்லுங்கள். அஞ்ஞான இருளை அகற்றி மக்களின் மனதில் ஞானவெளிச்சம் உண்டாகவும், சாத்தானின் வலையிற்சிக்கிச் சதாகாலத்துக்கும் நரகத்துக்குப்போகிற இன்னும் போகப்போகிற திரளான சனங்களுக்காகவும் அனுதினமும் தமது திவ்வியகுமாரனிடத்தில் நமக்காக மன்றாடும் நம் அன்னை நம்மையும் தம்மோடு மன்றாடும்படி கேட்கிறாள். அர்ச்சியசிட்டரோ, பாவியோ, பாப்பரசர்முதல் அவருடைய அதிகாரத்துக்குக் கீழ்ப்பட்ட பிரசைகளோ ஒவ்வொருவருக்கும் ஆறுதலும், சமாதானமும், அருளும், தைரியமும் கொடுக்கவல்லது இச்செபமாலையேயாகும். இதன் அற்புதவல்லமையை அறிவதற்குச் செபமாலை ஆராதனையைச் செய்துபாருங்கள். பரலோகத்தையும், பூலோகத்தையும், பாதாளத்தையும் அசைத்து இயக்கக்கூடியது செபமாலை. நாம் பக்தியுடன் பிரியதத்தமந்திரம் ஓதும்போது பரலோகமே மகிழ்கின்றது. மனிதரைப் பாவத்தில்விழுத்த நிழல்போல் சுற்றித்திரியும் பசாசு ஓடி ஒளிகின்றது. பாதாளமே நடுநடுங்குகின்றது. சரீரப் பாவஉணர்ச்சி காற்றிலகப்பட்ட தூசியைப்போல் பறந்துவிடுகிறது. மன ஆறுதல், சமாதானம், தேவநம்பிக்கை முதலியன திடப்பட்டுப் பெருகுகின்றது. ஆத்துமம் பலமும், வீரியமும், திடதைரியமுமடைகின்றன. இத்துணை இன்பந்தரும் பரிசுத்த செபமாலையின் வல்லமையைப்பற்றிச் சந்தேகிக்கவும் கூடுமா? மனிதர் கண்ணுக்கு அற்பமும், வியர்த்தமுமாகத் தோன்றக் கூடும். ஆனால், எல்லாம்வல்ல சர்வேசுரன் புதுமைகளைச்செய்ய இதை யோர் ஞானவாளாயுதமாகக் கைக்கொள்ளுகின்றார். செபமாலை மனிதரின் இருதயகமலங்களைப் பொய்யுலக ஆசாபாசங்களினின்று விடுவித்து, சர்வேசுரனை அன்புடன் ஆராதிக்கச் செய்யவும், நித்திய பேரின்ப காரியங்களில் ஆவலையும், ஆசையையும் உண்டுபண்ணி உயர்த்திவிடவும் வல்லது. இச்செபமாலையைப் பக்தியுடன் செபிப்பவர்கள் சடுதிமரணத்தால் இறந்துவிடப் போவதில்லை. ஆகவே, செபமாலை மாதாவின் மாதத்திலாவது நாம் அனுதினமும் செபமாலைசெபித்துச் சர்வேசுரனுடைய கிருபாகடாட்சத்தையும், அவரின் தயவையும், வரப்பிரசாதத்தையும் விடாமல் உறுதியாகக் கடைப்பிடித்து மோட்ச பேரின்பவாழ்வைப் பரிசாகப் பெற்றுக்கொள்வோமாக.

ஜே. மாகிறேற்,
நல்விளைப்பாற்றி கன்னியர்மடம்,
நுவரெலியா.

## ஒழுக்கம் உயர்வுதரும்

**அன்புமிக்க இளைஞர்களே!**

இருளை நீக்க இரவியுண்டு. தாகம் தணிக்க நீர் உண்டு. இளைப்பையும், களைப்பையும் நீக்க இனிய தென்றல் உண்டு.

ஒழுக்கம் என்பது மங்காத பண்புமணி. இதைக் கொண்டே ஆன்றோர், "ஒழுக்கம் விழுப்பம் தருதலால் அது உயிரினும் ஓம்பப்படும்" என்றனர். உலகிலே உள்ள கொடுந்தீமைகளைப் பூண்டோடு பொசுக்கி எரிப்பதற்கு மருந்தொன்று உண்டு. அதுவே, நல்லொழுக்கம் எனப்படும். ஒழுக்கம் என்பது அசுரத்தன்மையை அகற்றி அமரத்தன்மையை வளர்க்கும். நாம் செல்லும் இடங்களில் தீய ஒழுக்கத்தை அகற்றி நல்லொழுக்கத்தைக் கையாள வேண்டும். நல்லொழுக்கத்தின் சீரிய குணங்கள் தெய்வபக்தி, உண்மையறிவு, அறம் முதலியன. மாணவர்களாகிய நாம் சிறு வயதிலே கற்றபடி நடத்தல் வேண்டும். சிறுவயது தொட்டே நல்ல பழக்கங்களைப் பழகிக் கொண்டு வருதல் வேண்டும். சிறுவயதில் தீய பழக்கங்களைப் பழகிக்கொண்டால், வளர்ந்த பின்பும் அவைகளை விட்டுவிடுதல் மிகவும் கஷ்டமாய் இருக்கும். "தொட்டிற் பழக்கம் சுடுகாடு மட்டும்" என்பது பழமொழி. இளமையிற் பழகிய பழக்கமே முதுமையிலும் நிலைத்திருக்கும்.

மாணவ, மாணவிகளாகிய யாவரும் நல்ல பழக்கங்களை அன்றாட வாழ்க்கையில் கையாண்டு வந்தால் சீருள்ள உலகமொன்றை நாம் சிருட்டிக்கலாம். நாம் கல்வியைக் கற்றுப் பயனடைய வேண்டுமானால் நல்லொழுக்கத்தைக் கடைப்பிடிக்க வேண்டும். நல்லொழுக்கமுள்ளவன் கல்வி அறிவு இல்லாதவனும் செல்வத்தில் பிறக்காதவனுமாய் இருந்தாலும் அவன் எல்லோராலும் மதிக்கப்படுவான்.

ஆகவே, நாம் சருவேசுரனுக்கு உகந்த பிள்ளைகளாகச் சீவிக்க, நல்லொழுக்கத்தைக் கடைப்பிடித்து வருவோமாக.

ஞானப்பிதா

—( )—

# அன்னையின் ஆசை

(அ. இ. சா.)

கொழும்பிலே அக்குயினாஸ் கல்லூரியில் பீ. ஏ. வகுப்புப் படித்துக் கொண்டிருந்தேன். அன்று பரிசளிப்பு விழா. வழக்கம்போல் எனக்கும் பல பரிசுகள் வரவிருந்தன. விழாத்தலைவர் கொழும்பு உயர் நீதிமன்ற நீதியரசரென்பது எனக்கு அதிக பெருமையளித்தது. அவரிடமிருந்து பரிசுகள் பெறுவது பாக்கியந்தானே.

மிகவும் எடுப்பாக என்னை அலங்கரித்துக்கொண்டு மண்டபத்தில் எனக்குக் குறிக்கப்பட்டிருந்த இடத்தில் போயிருந்துகொண்டேன். சரியாக மாலை 6-30மணிக்கு விழா ஆரம்பமாயிற்று. நீதியரசர் வரவுகண்டு சபையோர் எழுந்து மரியாதைசெய்தனர். கல்லூரி அதிபர் அவரை வரவேற்று உயர் மேடைக்கு அழைத்துச் சென்றார்.

அதிபரின்வரவேற்புரையும், ஆண்டறிக்கையும் முடிந்து நீதியரசர் பரிசுகளை வழங்கினார். பரிசுபெறும் மாணவர் பட்டியல் வாசிக்கப்பட்டபொழுது எனது பெயர் பலதடவை வாசிக்கப்பட்டது.

ஒவ்வொருமுறையும் மேடைக்குச் சென்று திரும்பும்போது மண்டபம் அதிரும்படி கரகோஷம் செய்து மாணவரும், கூட்டத்தினரும் ஆரவாரித்தனர். மேடையில் நின்று இறங்கிவரும்பொழுது மண்டபத்தில் கூடியிருந்த அத்தனை பிரமுகர்களும் என்னையே வைத்தகண் வாங்காது பார்த்துக்கொண்டிருந்தனர்.

"அவனை நமது கம்பனியில் வேலைக்கமர்த்திக் கொள்ளவேண்டும்" என்று ஒரு முதலாளி திட்டமிட்டார் தனது மனதில். "இவனை நமது மருமகனுக்கிவிட வேண்டும்" என்று ஆசைகொண்டது ஒருதாயின் உள்ளம். "எனக்கேற்ற கணவன் இவர்தான்" என்று முடிவுசெய்தது ஒரு இளம் யுவதியின் உள்ளம். இவ்வாறு பலரிடமும் பலவித அபிப்பிராயங்கள் இருந்தன.

நாட்கள் சென்றன. பீ. ஏ. பரீட்சைமுடிவுகள் வெளியாகிப் பட்டமளிப்பு விழாவும் முடிவடைந்து விடுதியிலிருந்த ஏனைய மாணவர்கள் தத்தம் வீடுகளுக்குப் போக முடிவு செய்துகொண்டனர். நான் கொழும்பிலே ஒருவீட்டில் அறையொன்றை வாடகைக்கு எடுத்திருந்தேன். வீட்டுக்குப் புறப்பட இரண்டு நாட்களுக்குமுன் எனது ஆத்தும குருவானவரைச் சந்திக்கச்சென்றிருந்தேன். அவர் என்னை நன்கு அறிந்தவர். எனது குடும்ப நிலைபரத்தையும் பெரும்பாலும் என்மூலம் அறிந்தவர். என்னைப்போன்றவர்களிடம் அதிக அநுதாபமுடையவர், பரோபகாரசிந்தையுடையவர். "டேவிட் முதல்தரத்தில் பீ. ஏ. சித்தியடைந்துவிட்டீர்; இனி என்ன செய்ய யோசனை?" என்று கேட்டார் சுவாமியார். "சுவாமி எனது நெடுநாளைய ஆசையை இன்றுதான் உங்களுக்குக் கூறுகிறேன். நான் குருவாகவர விருப்பமுடையவனாயிருந்தேன். அப்படியே முடிவுசெய்துகொண்டேன்" என்றேன் நான்.

"நீர் கட்டாயம் குருவாக வேண்டுமா? தம்பி, சருவேசுரன் உம்மை அந்தப்பதவிக்கு அழைக்கவேண்டும்; எதையும் சற்று யோசித்துச் செய்யும்" என்றார். "என்ன சுவாமி சொல்லுகிறீர்கள், சருவேசுரன் எனக்குக் காட்சியளித்து 'என்பிறகே வா' என்று கூப்பிடவேண்டுமா? உத்தம குருவாவதற்கு வேண்டிய அத்தனை இலட்சணங்களும் எனக்கில்லையா? சிறுவனாயிருந்த பொழுதிருந்தே எனக்குக் குருவாக வரவேண்டுமென்று ஆசை இருந்துவந்தது."

"சரி மகனே, உம்மைப்பொறுத்த மட்டில் எல்லா இலட்சணங்களும் சரியாக இருக்கின்றன. ஆனால், உமது தாயாருக்கு இதுபற்றிக் கூறியிருக்கிறீரா? அவவுடைய அனுமதியும், அபிப்பிராயமும் அவசியமல்லவா?" என்று நியாயத்தை எடுத்துரைத்தார் சுவாமியார். "சுவாமி, நான் குருவாக வேண்டுமென்று எனது தாயாருக்குக் கூறினால் அவ ஒருபோதும் அதற்குச் சம்மதிக்கமாட்டா." "டேவிட், உம்மைப் படிப்பித்து ஆளாக்க அவள் எவ்வளவு கஷ்டப்பட்டாள். தன்னைத் தியாகஞ்செய்து உன்னைப் படிப்பித்தாள். அதனால் அவளிடம் உத்தரவு கேட்டுவிடுவதே மேல். உனது தீர்மானத்தை அவளிடம் தெரிவித்து அவளுடைய சம்மதத்தைப் பெற்றுக்கொள்ளவேண்டும் தம்பி" என்றார் அவர்.

"சுவாமி நீங்கள் கூறுவதும் நியாயந்தான். நான் குருபதவியை அடைய முடியாவிட்டாலும் நிச்சயம் எனது பிள்ளைகளில் ஒருவனை — முதல்தரமானவனைக் குருவாக அனுப்புவேன்" என்று கூறிக் குருவானவரின் ஆசிபெற்று எனது இருப்பிடத்துக்குச் சென்றேன்.

எனது இருப்பிடத்துக்கு நான் சென்றபொழுது எனது அறைக்கு முன்னால் ஒரு பெரியவர் எனக்காகக் காத்துநின்றார். கம்பீரமாக உடையணிந்து. தாளிப்பாகத் தோற்றமளித்த அவர் என்னைக்கண்டதும், தாமாகவே கதையை ஆரம்பித்தார். "தம்பி, உம்முடைய பெயர்தானே டேவிட்?" "ஆம், ஏன்?" என்றேன். எனது அறைக்கு அழைத்துச் சென்று அமரச்செய்தேன். "தம்பி, எனக்கு வயது ஆகிவிட்டது. எனது கம்பனியை ஒருபொறுப்பான, தகுதியுடையவரிடம் ஒப்படைத்துவிட வேண்டுமென்ற ஆவல், தகுந்த ஆளைத் தேடினேன். என்னுடைய மனதுக்குப்பிடித்த எவரும் சந்திக்கவில்லை. அன்று அக்குயினாஸ் கல்லூரிப் பரிசளிப்புவிழாவில் பார்த்ததிலிருந்து உம்மையே தகுதியானவரென நிச்சயப்படுத்திவிட்டேன்" என்று பெரியவர் விபரமாகக் கூறினார். மேலும் பெரியவர், "தம்பி, இன்னும் ஒரு முக்கிய அலுவல் எனது மகள் உம்மைத்தான் திருமணஞ்செய்துகொள்ளப்போகிறதாகப் பிடிவாதஞ் செய்கிறாள். இந்த இரண்டுவிடயங்களையும் பேசிமுடிவு செய்துவிடலாம் என்றுதான் வந்தேன்." இதுவும் தேவசித்தந்தானோ என்று முதலில் எனக்குத் தோன்றியது. ஆயினும், எனது மனதிலே ஒரே கலவரம். நான் குருவாகவேண்டும், தாயின் அனுமதி பெறவேண்டும் என்ற கவலையும், பெரியவரது புதியபிரச்சினையும் தலையிடியாயிருந்தது.

"இன்று நான் ஊருக்குப்போகிறேன். திரும்பிவந்ததும் எனது முடிவை உங்களுக்கு அறிவிப்பேன். இவ்வளவுதூரம் நீங்கள் சிரமப்பட்டதற்கு எனது நன்றி" என்று பெரியவரை வழியனுப்பிவிட்டு, பிரயாணத்துக்கு ஏற்பாடு செய்துகொண்டு புகையிரத நிலையத்துக்கு விரைந்தேன்.

நான் இருப்பது ஒரு குக்கிராமம். கண்டியில் ஒரு எஸ்ரேட்தான்; ஆக ஒதுக்குப்புறமானது. அந்த எஸ்ரேட்டை அடுத்துள்ள கோவில்வளவில்தான் எங்கள்வீடு இருக்கிறது. அங்குள்ள லயின்களில்வசிக்கும் இந்திய தொழிலாளிகளுக்கு அப்பம் சுட்டு விற்று வரும் வருமானத்தைக் கொண்டுதான் என்னைப் படிப்பித்து வந்தாள் எனதுதாயார். கோவில் வளவைத் துப்புரவாய் வைப்பதற்கும் சுவாமியார் சிறு உதவிப் பணம் கொடுப்பார்.

[வளரும்]

"ஒற்றுமையீனம் வலிமையை அழிக்கும்; தீயஒழுக்கம் உடம்பை அழிக்கும்."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கோட்டு விற்பனவு விளம்பரம்

**இல. M. B.3748**

கொழும்புத்துறை
கார்த்திகேசு நவரெத்தினம்
— வழக்காளி.

எதிராக
புத்தூர் தெற்கு
1. கதிர்காமர் இராசரெத்தினமும்
2. பெண் செல்லம்மாவும்
— எதிராளிகள்.

யாழ்ப்பாணம் டிஸ்திரிக்கோட்டின் M. B. 3748-ம் இலக்கவழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி, பின்னால்விபரிக்கப்படும் ஒருதுண்டுக்காணியை 1961-ம்ஆண்டு ஐப்பசிமீ 14-ந்உ சனிக்கிழமை முற்பகல் 10மணிதொடக்கம் அந்தக் காணிக்குள்நின்று பிரசித்தஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல்வட்டி ரூபா 1,340-உம், 16-11-60 தொடக்கம் 24-2-61 வரைக்கும் ரூபா 1,000-க்கு 25வீத வட்டியும், அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 5வீதவட்டியும், கோட்டுச்செலவு 177ரூபா 30சதமும்.

### ஆதன விபரம்

வடமாகாணம், யாழ்ப்பாணடிஸ்திரிக் வலிகாமம்கிழக்குப்பகுதி, புத்தூர்கோயிற்பற்று புத்தூர் தெற்குஇறை, "முருகன் திடல்" பர. செற். இலா. 19 (பத்தொன்பது). இதில் மேற்குப்பக்கமாக பர. செற். இலா. 4 (நான்கு). இதற்கு எல்லை: கிழக்கு— சிதம்பரப்பிள்ளை பெண் சேதுப்பிள்ளையின் ஆதனம். வடக்கு — ஒழுங்கை. மேற்கு — பொன்னன் பெண் முத்திக்கும், பங்காளருக்கும் உரியஆதனம். தெற்கு — மேற்சொல்லிய எதிரிகளின் ஆதனம். இவ்வாதனம் யாழ்ப்பாணம் காணிப்பதிவுகந்தோரில் K 86/183இலக்கத்தில் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

அ. ஜெகநாதன்,
கொமிஷனரும், விலைமதிப்பாளரும்
16 A, அம்மன் ரோட்,
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

**வழ. இல. M. B. 3430**

**யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டில்**

சண்டிலிப்பாய்
தம்பையா செல்லத்துரை
— வழக்காளி

எதிராக
மீசாலை, மீசாலை தெற்கு
1. வாரித்தம்பி வயித்திலிங்கமும்,
2. மனைவி இரத்தினமும்
— எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M. B. 3430-ம் இலக்கவழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணி 1961-ம் வருடம் கார்த்திகைமாதம் 4-ந் திகதி (4-11-61) சனிக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல் வட்டி ரூபா 350/-ம், மேலும் 300 ரூபாவுக்குப் 17-6-60 தொடக்கம் 9-1-61வரைக்கும் வருடமொன்றுக்குப் 12 வீத வட்டியும், அதன் பின் முழுத்தொகைக்கும் இறுக்கும் வரைக்கும் வருடமொன்றுக்கு 5 வீத வட்டியும், கோட்டுச்செலவு 143 ரூபா 38 சதமும்.

### காணி விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாண டிஸ்திறிக் வலிகாமம் மேற்குப்பகுதி பண்டத்தரிப்புக் கோவிற்பற்று மாதகல் இறை "அம்மையா வேம்படி" நிலப்பரப்பு 1½. வீடும், பயிர்களும். இதற்கு எல்லை: கிழக்கும், மேற்கும்—நாகமுத்து கணபதிப்பிள்ளைக்குரிய ஆதனங்கள். வடக்கு—சிதம்பரப்பிள்ளை நடராசாவுக்குரிய ஆதனம். தெற்கு—ஒழுங்கை. கிழக்கெல்லைக் காணிக்குள் இருக்கும் கிணற்றில் தண்ணீர்ப் பங்கும், வழிவாய்க்கால் பாவிப்புரித்தும்.

இது முழுவதும் பதிவு E. 310/59.

வி. செ. குட்டிப்பிள்ளை,
கொமிஷனர்.
643, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம். 16-9-61

## கோட்டு விற்பனவு விளம்பரம்

**இல. M. B. 3657**

**யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டில்**

புங்குடுதீவு கிழக்கு
முருகேசு முத்தையாபிள்ளை
— வழக்காளி

எதிராக
புங்குடுதீவு மேற்கு
கந்தையா கண்ணையா — எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M. B. 3657-ம் இலக்கவழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணி 1961-ம் வருடம் கார்த்திகைமாதம் 14-ந் திகதி செவ்வாய்க்கிழமை(14-11-61)முற்பகல் 10 மணிதொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல் வட்டி ரூபா 3,000/-உம், இன்னும் ரூபா 1,500/-க்கு 27-9-60 தொடக்கம் 28-2-61 வரையும் 100-க்குப் 18% வட்டியும், பின்பு கூட்டுத்தொகைக்கு இறுபடும்வரையும் 100-க்கு 5% வட்டியும், கோட்டுச் செலவு ரூபா 221, சதம் 92. இதில் ரூபா 100/- கோட்டுச்செலவுக்காகக் கொடுபட்டது.

### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாண டிஸ்திறிக் தீவுப்பகுதி புங்குடுதீவுக் கோயிற்பற்று புங்குடுதீவு மேற்கிறை 'நாகிய காடு'ம், நாகியகாடு மேற்கும் ப. நி. இ. 12. இதில் வடக்குப்புறமாக நி. ப. 6-உம், செய்பயிர், வான்பயிர்களும், வீடுகளும், கிணறும். எல்லை: கிழக்கு—சண்முகநாதன் பெண் சிவக்கொழுந்தின் ஆதனம். வடக்கு — கந்தசாமி பெண் நாகரெத்தினத்திற்கும், கனகசபைபெண் இராசம்மாவிற்கும், பங்காளருக்கும் உரிய ஆதனங்கள். மேற்கு — ஒழுங்கை. தெற்கு — முருகேசு இலட்சுமணபிள்ளையின் ஆதனம். இதடங்கலும்.

செ. இரத்தினசபாபதி,
கொமிஷனரும், விலைமதிப்பாளரும்
45, 4-ம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம். 2-10-61

## கோட்டு விற்பனவு விளம்பரம்

**இல. M. B. 2153**

**யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டில்**

நல்லூர்
1. இராமலிங்கம் கனகசபாபதியும்,
2. பெண் சிதம்பரவல்லியும்
— வழக்காளிகள்

எதிராக
கொழும்புத்துறை
கணபதிப்பிள்ளை செல்லையா
— எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M. B. 2153-ம் இலக்கவழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் இரண்டு துண்டுக் காணிகள் 1961-ம் ஆண்டு கார்த்திகை மாதம் 9-ந் திகதி (9-11-61) வியாழக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்

தீர்வைத்தொகை: முதல் வட்டி ரூபா 2,508/-ம், இன்னும் ரூபா 1,500/-க்கு 8-4-1958 தொடக்கம் 19-6-1958 வரையும் 100-க்குப் 10% வட்டியும், பின்பு கூட்டுத்தொகைக்குப் 19-6-58 தொடக்கம் இறுபடும் வரையும் 100-க்கு 5% வட்டியும், கோட்டுச் செலவு ரூபா 191 சதம் 61.

### காணிகள் விபரம்

1. வடமாகாணம் யாழ்ப்பாண டிஸ்திறிக் யாழ்ப்பாணப்பகுதி சுண்டிக்குளிக் கோயிற்பற்று கொழும்புத்துறை இறை 'நொச்சியடி வயல்' ப கெ. இ. 5-ம், குளி 2¾-ம், அதற்குச்சேர்ந்தவைகளும். எல்லை: கிழக்கு — பின்னாற் சொல்லப்படும் 2-ம் காணி. வடக்கு—கணபதி தில்லைநாதருக்கும், சின்னப்பு பெண் சின்னப்பிள்ளைக்கும் உரியகாணி. மேற்கு—செல்லத்துரை பெண் இராசம்மாவின் காணி. தெற்கு—ரோட்டு. இதடங்கலும்.

2. மேற்படி கொழும்புத்துறை இறை 'கடற்கரை வயல்' ப. கெ. இ. 3-ம், குளி 1¾-ம், அதற்குச்சேர்ந்தவைகளும். எல்லை: கிழக்கும், தெற்கும்—ரோட்டு. வடக்கு—சின்னப்பு பெண் சின்னப்பிள்ளையின் காணி. மேற்கு — மேற்சொல்லப்பட்ட 1-ம் காணி. இதடங்கலில் சொரியலாய் அரைவாசி.

செ. இரத்தினசபாபதி,
கொமிஷனரும், விலைமதிப்பாளரும்
45, 4-ம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம். 2-10-61

# கோட்டுவிற்பனவு விளம்பரம்

**வழ. இல. 3091**

## யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டில்

சிவியாதெரு
வே. இ. சுப்பிரமணியம் கைம்பெண்
தங்கரெட்டினம்
— வழக்காளி

எதிராக, மண்டைதீவு
இராமலிங்கம் நாகலிங்கம்
— எதிராளி.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M. B. 3091-ம் இலக்கவழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் ஆறு துண்டுக்காணிகளை 1961-ம்ஆண்டு கார்த்திகைமாதம் 4-ந்திகதி சனிக்கிழமை (4-11-61) முற்பகல் 9மணிதொடக்கம் அந்தக்காணிக்குள்நின்று பிரசித்தஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல்வட்டி ரூபா 2,000-ம், 15-10-1957 தொடக்கம், 6-7-1960வரைக்கும் ரூபா 1,000-க்குப் 12வீதவட்டியும், அதன்பின் கூடியமுழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 5%வட்டியும். இதில் ஏற்பட்டசெலவு ரூபா 129-50சதம். வெலியாத்துச்செலவு ரூபா 38-50சதம். வரும்செலவு ரூபா 14-12 சதம். இதில் 90ரூபா கழிவு.

### ஆதன அட்ர்பு

வடமாகாணம், யாழ்ப்பாணடிஸ்திறிக் தீவுப்பகுதி அல்லைப்பிட்டி கோயிற்பற்று, மண்டைதீவுஇறை "புல்லடித்தோட்டம்" என்னும்காணி நில. பர. 18. இதில் வீடும், கிணறும், வேறு தானுய்உண்டான பயிரும். எல்லை: கிழக்கு — நாராயணபிள்ளை வெற்றிவேலுவின் ஆதனம். வடக்கு — மண்ஒழுங்கை. மேற்கு — புஸ்பதிச்செட்டியாரின் மனைவி நாகலச்சுமிக்கும், பங்காளருக்கும் உரியஆதனம். தெற்கு — நாராயணபிள்ளை வெற்றிவேலுவின் ஆதனமும், சித்திவிநாயகபிள்ளையார்கோயிலும் உண்டு.

2. வடமாகாணம், யாழ்ப்பாணடிஸ்திறிக் தீவுப்பகுதி, மேற்படிகூறிய கோயிற்பற்று மண்டைதீவுஇறை "நொச்சித்தாழ்வு" என்னும்காணி நில. பர. 6. இதில் பிரிக்கப்படாத அரைவாசி. இதில் வீடும், கிணறும், வேறுதானுய்உண்டான பயிரும்உண்டு. எல்லை: கிழக்கு — வைத்திலிங்கம் செல்லத்துரையின் ஆதனம். வடக்கு — பொன்னம்பலத்தின் மனைவி காசிவதிப்பிள்ளையின் ஆதனம். மேற்கு — கனகசுந்தரத்தின்மனைவி கனகம்மாவின் ஆதனம். தெற்கு — கைஒழுங்கை.

3. வடமாகாணம், யாழ்ப்பாணடிஸ்திறிக் தீவுப்பகுதி, மேற்கூறியகோயிற்பற்று மண்டைதீவுஇறை, "மணிப்பத்து" என்னும்காணி நில. பர. 4. இதில் பிரிக்கப்படாத அரைவாசி. இதில் வீடும், கிணறும் வேறு தானுய்உண்டான பயிரும் உண்டு. எல்லை: கிழக்கும், வடக்கும்— கைஒழுங்கை. மேற்கு — சின்னப்பா வைத்திலிங்கத்தின் ஆதனம். தெற்கு — சித்தம்பலத்தின்மனைவி செல்லம்மாவின் ஆதனம்.

4. ஷை இறை காணி நிலப்பரப்பு 8. இதில் பிரிக்கப்படாத அரைவாசி. இதில் கிணறும், வேறு தானுய்உண்டான பயிரும் உண்டு. எல்லை: கிழக்கு — வைத்திலிங்கம் வேலுப்பிள்ளைக்கும், பங்காளருக்கும் உரியஆதனம். வடக்கு — கணபதிப்பிள்ளையின்மனைவி விசாலாட்சியின் ஆதனம். மேற்கு — எதிராளிக்கும், பங்காளருக்கும் உரிய ஆதனம். தெற்கு— கதிரவேலு ஈராம்பமூர்த்திக்கும், பங்காளருக்கும் உரியஆதனம்.

5. வடமாகாணம், யாழ்ப்பாணடிஸ்திறிக் தீவுப்பகுதி, மேற்கூறிய கோயிற்பற்று மண்டைதீவுஇறை "கம்பம்புலம்" என்னும்காணி நில. பர. 22¼. இதில் பிரிக்கப்படாத ⅓பங்கு. இதில் பனைமரங்கள் உண்டு. எல்லை: கிழக்கு — நாகமுத்து கந்தையாவுக்கும், பங்காளருக்கும் உரியஆதனம். வடக்கு — குருநாதன் கைம்பெண் நாகமுத்துவின் ஆதனம். மேற்கு—அப்பாவுதில்லியம்பலத்துக்கும், தம்பியாருக்கும் உரியஆதனம் தெற்கு — சின்னத்தம்பி அப்புக்குட்டிக்கும், வேலுப்பிள்ளை இளையதம்பிக்கும் உரிய ஆதனம்.

6. வடமாகாணம், யாழ்ப்பாணடிஸ்திறிக் தீவுப்பகுதி மேற்கூறியகோயிற்பற்று மண்டைதீவுஇறை, "ஊரிக்காடு" என்னும்காணி நில பர. 6-உம், கிணறும், வேறு தானுய்உண்டான பயிரும்உண்டு. எல்லை: கிழக்கு— செல்லப்பா சுப்பிரமணியத்தின் ஆதனம். வடக்கு — சின்னத்தம்பி வேலுப்பிள்ளைக்கும், பங்காளருக்கும் உரியஆதனம். மேற்கு — சரவணமுத்துவின்மனைவி அன்னப்பிள்ளைக்கும், பங்காளருக்கும் உரிய ஆதனம். தெற்கு — கணபதிப்பிள்ளையின் மனைவி விசாலாட்சியின் ஆதனம்.

இ. கனகரெத்தினம்,
கொமிஷனரும், விலைமதிப்பாளரும்
நம். 35, சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்.

### பிழை திருத்தம்

பாதுகாவலனிலே சென்ற 30-9-61-ல் வெளிவந்த M. B. 3497 எனும் இலக்கத்தைக்கொண்ட கோட்டுவிற்பனவு விளம்பரத்திலே காணி விபரத்தின்கீழ் "இதடங்கலும் B. 46/34 இன்கீழ்" என்றிருப்பதை B. 46/35 இன்கீழ் பதிவு செய்யப்பட்டது எனத் திருத்தி வாசிக்கவும்.

### நன்றித்துதி

கருணைநிறை நேசத்தாயே, பரி. சதா சகாயமாதாவே உமதுமூலம் அடியேன் அடைந்துகொண்ட சகலநன்மை உபகாரங்களுக்காகவும் விசேஷமாய் நான்கேட்டுக்கொண்ட நன்மைகளை நீர்அருளியதற்காகவும் என் மனமார்ந்த நன்றித்துதியைப் பிரசித்தப்படுத்துவதோடு அதன் வழியாய் இன்னும் உமது உதவிகளைத் தாழ்மையுடன் வேண்டுகிறேன். எனது நேர்த்தியை உடனடியாக நிறைவேற்ருத குற்றத்திற்காக மிகவும் மனம் வருந்துகிறேன். — உமது அடியான்

### பாண்துண்டும் பணிஸும்

பாண்துண்டுகளுக்கும், பணிஸுகளுக்கும் விதிக்கப்பட்டிருந்த விலைக்கட்டுப்பாடு உடனடியாக நீக்கப்பட்டுவிட்டதாகச் சென்றசனிக்கிழமை 'கெசற்'மூலம் அறிவிக்கப்பட்டிருக்கிறது. ஆவணி 10-ந்திகதிமுதல் நடைமுறைக்குவந்த இந்தவிலைக்கட்டுப்பாட்டைப் பாராளுமன்ற அங்கத்தவர்கள் பலமாகக் கண்டித்திருக்கிருர்கள். இந்த விலைக்கட்டுப்பாட்டை நடத்திக்கொள்ள முடியாமற் போயினமையே அது நீக்கப்படக் காரணமாகும்.

### புதிய நூதன பொருட்காட்சிச்சாலை

ஊர்காவற்றுறையிலே நூதன பொருட்காட்சிச்சாலை ஒன்றை அமைக்கத் தீவுப்பகுதிக் காரியாதிகாரி திரு. சாமுவேல் தம்பையா அவர்கள் வேண்டியஒழுங்குகளைச் செய்துவருகின்ருர். அங்குள்ள ஹம்மன்கில்எனும் கடற்கோட்டையிலே இதனை அமைக்கமுடிவு செய்யப் பட்டிருக்கிறது. தீவுப்பகுதியிலுள்ள பட்டினசபை, கிராமச்சங்கங்கள், கிராமமுன்னேற்ற சங்கங்கள் ஆதியன இதுவிஷயமாய்ஒத்துழைக்குமாறு கேட்கப்பட்டிருக்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உல்லாச வேளை

—நமது நிருபர் அமலன்

## சம்மனசுகளின் மாதம்

## கிரகோரியார் பூசை

## பாப்பரசரும், உலகியலும்

## ஒல்லாந்தில் கத்தோலிக்கம்

## ஆபிரிக்க பாப்புமார்

பெரியண்ணை: இந்தஐப்பசி மாதம் தேவதூதர்கட்கும் உரிய மாதம். எனவே, எமது குடும்ப செபங்களில் தேவதூதர்களையும் நோக்கி வேண்டிக் கொள்வதவசியம்.

அன்ரன்: ஐப்பசிமாதம் செபமாலையின் மாதமல்லவா?

பெரியண்ணை: ஆம். செபமாலையின் மாதம்தான். ஆயின், சத்திய திருச்சபை இதேமாதத்தில்தான் தேவதூதர்களையும் சிறப்பாக நினைவுபடுத்துகிறது.

அகஸ்ரின்: தேவதூதர்கள் இறைவனின் தூதுவர்களாக விளங்குபவர்கள். தேவனின் செய்தியை எங்கட்குத் தெரிவிப்பது அவர்களின் முக்கிய அலுவல். எம்மைப் பாதுகாப்பதும் அவர்களே.

அப்பா: பல முக்கிய செய்திகளைப் பூலோகத்திலுள்ள பிரமுகர்கட்குத் தெரிவிப்பதற்குச் சம்மனசுகளை இறைவன் உபயோகித்திருக்கிறார். அன்ரன், கார்மெலா எங்கே சிலவற்றைச் சொல்லுங்கள் பார்க்கலாம்?

அன்ரன்: சக்கரியாஸ் பலிசெலுத்திக்கொண்டிருக்கும்போது கபிரியேல் சம்மனசு காணப்பட்டு அவரது மனைவி கர்ப்பமுற்றுப் புதல்வனொருவனைப் பிரசவிப்பாளென அறிவித்தார். அப்பிள்ளைக்கிடவேண்டிய பெயரையும் தெரிவித்தார். இதே சம்மனசு தேவதாய்க்கும் காட்சியளித்து அவள் ஆண்டவரின் தாயாராகவிருப்பதையும் தெரிவித்தார்.

கார்மெலா: தோபியாஸ் என்பவரின் குடும்பத்துக்குப் பல உதவிகளை இரப்பாயல் என்ற தூதர் அளித்தார். யேசுநாதரின் பிறப்பைப் பல தூதர்கள் இடையருக்குத் தெரிவித்தனர். ஏரோது அரசனின் சதியைச் சூசையப்பருக்குத் தெரிவித்தவரும் தேவதூதர்தானே.

அகஸ்ரின்: கெட்ட சம்மனசுகளை எதிர்த்துப்போராடி நரகத்தில் தள்ளியவர் அதிதூதர் மைக்கல் என்பவர். சம்மனசுகள் பல அர்ச்சியசிஷ்டர்கட்கும் உதவிசெய்துவந்திருப்பதாகச் சரித்திரங்கள் கூறுகின்றன.

கார்மெலா: ஞானஸ்நானம்பெற்றவுடன், அல்லது சில தினங்களின்பின்னர் இறக்கும் குழந்தைகள் சம்மனசுகளாகிவிடுகின்றனவாம். மெய்தானா? அந்தக் குழந்தைகளை நோக்கி நாம் பிரார்த்திக்கலாமா?

பெரியண்ணை: ஞானஸ்நானம் பெற்றபின் இறக்கும் குழந்தைகள் மாசற்றவர்கள். எனவே, அவர்கள் சம்மனசுகட்கு நிகரானவர்கள். ஆயின், அவர்கள் சம்மனசுகளாக மாறுவதில்லை. சம்மனசுகட்கு உருவம் கிடையாது; ஆன்மாமட்டுமே உண்டு. விசுவாசிகள் ஆன்மாவுடன் உடலையும் கொண்டவர்கள். பொதுத்தீர்வையின் போது விசுவாசிகள் ஆத்தும சரீரத்தோடு எழுவார்கள் அல்லவா? இக்குழந்தைகளும் அவ்விதமே. ஆயின் அவர்கள் மாசற்றவர்களாயிருப்பதால் அர்ச்சியசிட்டர்களை நோக்கிப் பிரார்த்திப்பதுபோல அவர்களையும் நோக்கிப் பிரார்த்திக்கலாம். எங்கள் வேண்டுதல்களை இறைவனிடத்தில் சமர்ப்பித்து உதவிசெய்வார்கள்.

அன்ரன்: அப்படியாயின் ஞானஸ்நானம் பெற்றபின் இறக்கும் குழந்தைகட்காகச் செபித்தலோ, அல்லது துக்கப்பூசை செய்வித்தலோ பிரயோசனமற்றதுதானே?

அகஸ்ரின்: ஆம். குழந்தைகட்காகத் துக்கப்பூசை செய்விப்பதில்லை. அவர்கட்காக விரும்பினல் சம்மனசுகளின் பூசையை ஒப்புக்கொடுக்கலாம்.

அப்பா: பாப்பாண்டவர் அண்மையில் ஒரு நிருபத்தை வெளியிட்டாரல்லவா? அதைப் பிரதமர் நேரு மிகவும் பாராட்டிப் பேசியிருக்கிறாராம். இந்திய பாராளுமன்றத்தில் அவர் அடுத்த ஐந்தாண்டுத் திட்டம்பற்றிப் பேசுகையில் இந்நிருபத்தின் சிலபகுதிகளை எடுத்துக்காட்டி இன்றைய உலகத்தின் தேவைகளையும், பொருளாதாரத்தையும் மனதில் கொண்டு வரையப்பட்ட நிருபம் எனக் கூறினாராம்.

அகஸ்ரின்: ஆனல், இத்தாலியிலும், மாஸ்கோவிலும் வெளியாகும் சில பொதுவுடைமைப் பத்திரிகைகள் இந்நிருபத்தைப்பலவாறு கேலிசெய்து தொழிலாளர்களையும், பாட்டாளிமக்களையும் பொதுவுடைமைத் தத்துவங்களிலிருந்து இழுத்தெடுக்கப் பாப்பாசர் பொதுவுடைமைத் தத்துவங்களிலிருந்தே சில கொள்கைகளையெடுத்துப் பிரசுரித்திருக்கிறார்என அபத்தமானசெய்திகளை வெளியிட்டிருக்கின்றன.

நிர்மலா: நீங்கள் போய்ச் சுவிசேஷத்தைப் போதியுங்கள் என்றுதானே யேசுக்கிறிஸ்துநாதர் கூறினர். இவ்விதம் பொதுஅலுவல்களிலும் உலக சமாதானம்பற்றிய கருமங்களிலும் பாப்பாசர் ஏன் தலையிடவேண்டும்?

பெரியண்ணை: **பொருளாதாரம், அரசியல், சமூகசேவை** இவை மூன்றும் மதத்திலிருந்து புறம்பானவையல்ல. மக்களுக்கு இவை எவ்வளவு அவசியமோ, அவ்விதமே மதமும் அவசியம். இவ்அம்சங்களின் செழிப்பு, சுதந்திரம், உரிமை என்பவற்றில் மதத்தின் பிரதானம் தங்கியிருக்கிறது. பொருளாதாரத்தில் பின் தங்கியுள்ள ஒரு நாடு, இலகுவாகப் பொதுவுடைமைக்கொள்கைகளைப் பின்பற்றுகிறது. அரசியற்கட்சிகளின் தவருன வழிநடாத்துகையால் அரசாங்கங்கள் பொதுவுடைமை நாடுகளைத் தங்கள் வழிகாட்டிகளாகக்கொள்கின்றன. எனவே, ஒரு மனிதனின் தனியுரிமை, சுதந்திரவாழ்வு, சுபீட்சநிலை இவற்றுக்காகப் பாடுபட மதபோதகர்கட்குப் பிரதான கடமையுண்டு. மதம்வேறு இவைவேறு எனப்பிரிப்பது அபத்தமே. உலகமெங்கும் பரந்துள்ள கத்தோலிக்கரின் ஆன்மீகத் தலைவர் என்றவகையில் கத்தோலிக்க மக்களின் பொருளாதாரம், அரசியல் வாழ்வு, சமூகநிலை என்பனபற்றிப் பேசப் பாப்பாசருக்குப் பூரண உரிமை மட்டுமல்ல, கடமையும் உண்டு. நேருவும், டிட்டோவும், நாசரும் சமாதானத்தைப்பற்றிக் குரல் எழுப்பும்போது, வல்லரசுகளின் நடத்தைபற்றிக் கண்டிக்கும்போது, வத்திக்கான் இராச்சியத்தின் தலைவர்என்ற முறையில் பாப்பாசருக்கும் அதே உரிமை உண்டு. சென்ற மகாயுத்தத்தின் போது காலஞ்சென்ற பன்னிரண்டாம் பத்திநாத பாப்பாசர் செய்த மகத்தான சமாதானப்பணியை, சமூகசேவையை எல்லாநாடுகளின் தலைவர்களும் பாராட்டினரே.

அஞ்சலா: பாப்பாண்டவர் என்றதும் எனக்கு ஒரு பிரச்சினை. ஆபிரிக்கர் யாராவது பாப்பரசராகத் தெரியப்பட்டிருக்கின்றனரா?

அகஸ்ரின்: திருச்சபையிலும் சாதிவித்தியாசம் இருக்கக்கூடுமென நீ எண்ணுகிறாயா? மூன்று ஆபிரிக்கர் பாப்பரசராகப் பதவியேற்றுச் சிறப்பாகத் தொண்டாற்றியிருக்கின்றனர். இராயப்பரின்ஸ்தானத்தைவகிக்கக் கத்தோலிக்கனுகப் பிறந்த எந்த ஆண்மகனுக்கும் உரிமையுண்டு.

அம்மா: அந்தப் பாப்புமாரைப் பற்றிச் சொல்லுங்களேன்.

அகஸ்ரின்: இந்த மூன்று பாப்பரசர்களும் அர்ச்சியசிஷ்டர்களாக இன்று கௌரவம் பெற்றுள்ளார்கள். 189-ம் ஆண்டில் பாப்புவாகத் தெரியப்பட்டார் முதலாவது விக்ரர் என்ற நீக்கிரோ. அதுவரை திருச்சபையின் உத்தியோக மொழியாகக் கிரீக் மொழியே வழங்கப்பட்டுவந்தது. இப்பாப்பரசரே லத்தீன்மொழியைப் புகுத்தியவர். இரண்டுவருடங்கள் இராயப்பரின் ஸ்தானத்தை அலங்கரித்தார். அர்ச். மெல்சியடிஸ் 311-ம் ஆண்டு பதவியேற்றார். அக்காலத்தில் மும்முரமாக எழுந்த வேதகலாபனையின் போது இவராற்றிய சேவை மெச்சத்தக்கது. கடவுட்கொள்கைகளில் ஏற்பட்ட முரண்பாடுகளையும் போலித் தத்துவங்களையும் உறுதியாக நின்று எதிர்த்தார் எனச் சொல்லப்படுகிறது. நான்குவருடங்கள் இவர் திருச்சபையின் தலைவராகவிருந்தார். அர்ச். ஜெலாசியஸ் 492-ல் பாப்புவாகத் தெரியப்பட்டார். இவர் காலத்திலும் திருச்சபைக் கெதிராக மிக வன்மையோடு பல பிரச்சினைகள் கிளம்பின. அவற்றையெல்லாம் அஞ்சாது எதிர்த்துத் திருச்சபையைக் காப்பாற்றினர்.

அன்ரன்: அப்பாவுக்கு இன்று ஓர் அழைப்பிதழ் கிடைத்தது. அதில் அண்மையில் காலஞ்சென்ற ஒரு பிரமுகருக்காக நடாத்தப்படும் துக்கப் பாடற்பூசைக்குச் சமுகமளிக்கும்படி கண்டிருந்தது. பின்னர், **"தொடர்ந்து கிரகோரியார் பூசைகளும் நடாத்தப்படும்"** எனக் காணப்பட்டது. கிரகோரியார் பூசையென்றால் என்ன?

அப்பா: காலஞ்சென்ற ஒருவருக்காக 30 நாட்கள் தொடர்ந்து பூசை ஒப்புக்கொடுத்தலையே கிரகோரியார் பூசை என்கிறார்கள்.

நிர்மலா: ஆமாம். அவ்விதம் கிரகோரியார் பூசை ஒப்புக்கொடுத்தலை, ஒரே குருவரே தொடர்ந்து செய்ய வேண்டுமாம்.

அகஸ்ரின்: கிரகோரியார் பூசைகளின் முடிவில் அந்த ஆன்மா நித்திய சம்பாவனையை அடையும் என்பதைத் திருச்சபை உறுதியாக நம்புகிறது.

கார்மெலா: ஏன் இந்தப் பூசைகட்குக் கிரகோரியார் பூசை எனப் பெயர் வழங்குகிறது?

அஞ்சலா: கிரகோரியாருக்கும் இவற்றுக்கும் ஏதும் தொடர்பிருக்கலாம்.

பெரியண்ணை: சரியாய்ச் சொன்னாய். பெரிய கிரகோரியார் பாப்பரசர், பாப்புவாவதற்குமுன்னர் ஆசீர்வாதப்பர் சபையின் பிரதம மடாதிபதியாகவிருந்தார். ஆசீர்வாதப்பர் சபைத் துறவிகட்கு மிகக்கடினமான விதிகள் அமைந்திருப்பது உங்கட்குத்தெரியும். அச்சபையில் ஒரு துறவி மரித்தபின்னர் அவரது பொருட்களை அகற்றியபோது சபை ஒழுங்குகட்கு மாறாக ஒரு தொகைப்பணத்தைஅச்சந்நியாசி மறைத்துவைத்திருந்தது கண்டுபிடிக்கப்பட்டது. இச்சம்பவம் அவரது நித்தியசம்பாவனைக்கு இடையூறாகவிருக்கும் என எண்ணிய மடாதிபதி கிரகோரியார், அத்துறவிக்காக முப்பது தினங்கள் பூசைப்பலி ஒப்புக்கொடுத்து வேண்டுதல் செய்வதற்கான ஒழுங்குகளை மேற்கொண்டார். முப்பதாம் நாளில் அத்துறவி அர்ச். கிரகோரியாருக்குக் காணப்பட்டு, தனதுகுற்றம் மன்னிக்கப்பட்டு நித்திய சம்பாவனை பெறப் பரலோகம் செல்வதாகக் குறிப்பிட்டுத் தமக்காக முப்பதுதினங்கள் தொடர்ந்து பூசைப்பலி ஒப்புக்கொடுத்தமைக்காக நன்றிதெரிவித்தார். அர்ச். கிரகோரியார் தாம் பாப்புவாகத் தெரியப்பட்ட பின்னர் மரித்தோருக்காகத் தொடர்ந்து முப்பதுதினங்கள் பூசைகள் ஒப்புக்கொடுக்கும் வழக்கத்தை அனுசரணைக்குக் கொண்டுவந்தார்.

அப்பா: போலாந்து தேசத்திலும் கத்தோலிக்க அலுவல்கட்குப் பலமான முட்டுக்கட்டைகள் போடப்பட்டு வருகின்றனவாமே. இவ்விதம் எல்லாத் தேசங்களிலுமே கத்தோலிக்கம் நசுக்கப்பட்டால் அதன் கதி?

அகஸ்ரின்: இராயப்பா நீ கல்லாயிருக்கிறாய். இந்தக் கல்லின்மேல் எனது திருச்சபையைக்கட்டியெழுப்புவேன். நரகத்தின் வாசல்கள் அதை ஒருபோதும் மேற்கொள்ளா என யேசுக்கிறிஸ்துநாதரே கூறியிருக்கிறார். திருச்சபைக்கு இன்னல்கள் நேரிடுவது இதுதான் முதல்தடவையல்ல. எத்தனையோ பாரச்சிலுவைகளை அது சுமந்துவந்திருக்கிறது கடந்த காலத்தில். உலகின் ஒருபக்கத்தில் திருச்சபைக்கு நெருக்கிடை அதிகமாகிக்கொண்டுவரும்போது மற்றொருபக்கத்தில் அது பலுகிப்பெருகிக் கொண்டுவருவதை நாம்காணலாம். ஒரு கொடுங்கோலன் திருச்சபையை நிர்த்துளியாக்கிவரும் தருணத்தில் இன்னேரிடத்தில் ஓர் அர்ச்சியசிஷ்டர் சுவிசேஷத்தை விசேடவிதமாகப் போதித்துக் கத்தோலிக்கமறையுள் அதிகமானபேரைத் திருப்பியதையும் பழைய வரலாறுகள் எமக்கு எடுத்துக் காட்டுகின்றன. எனவே, இந்த நெருக்கிடைக்கு நாம் அஞ்சவேண்டியதில்லை.

பெரியண்ணை: நீங்கள் சொல்வது சரிதான். அண்மையில் ஒல்லாந்து தேசத்தில் கத்தோலிக்க சமயத்தின் அபிவிர்த்திபற்றிப் பத்திரிகைகளில் படித்தேன். ஒல்லாந்து தேசத்தில் கத்தோலிக்க மதத்தில் குற்றங்களைச் சுமத்தி அதன்காரணமாக மதப்புரட்சி யேற்பட்டுத் திருச்சபையைவிட்டுப் பிரிந்து புரொட்டஸ்தாந்துமதம் பெருகிய காலமொன்றுண்டல்லவா? அன்றிலிருந்து இன்றுவரை கத்தோலிக்க மதம் அத்தேசத்தில் சிறுபான்மையோரின் மதமாகவேயிருந்து வந்தது. ஆயின் தற்போது புள்ளிவிபரப்படி கத்தோலிக்கமதம் முன்னணியில் இடம்பெற்று வருகிறதாம்.

அம்மா: காலம்வரும். அப்போது கம்யூனிஸ்தஆட்சியில் வேதனைப்படும் மக்களும் மகிழ்ச்சியடைவாகள். அவர்கட்காக நாங்கள் செய்யக்கூடியதெல்லாம் பாப்பாண்டவர் சொன்னதுபோல மன்றாடிக்கொள்வதுதான்.

## இந்தியவெற்றிலை

இந்தியாவிலிருந்து வெற்றிலைஇறக்குமதி செய்வது உடனடியாகத் தடைசெய்யப் பட்டிருக்கிறது. லைசென்ஸ் பெற்றபின்னரே எவரும் அதனை இறக்குமதிசெய்யலாம். ஆனல், தற்சமையம் எவருக்கும் இந்தலைசென்ஸ் கொடுபடமாட்டாது.

Printed and Published for the Proprietor by NICHOLAS JAMES, residing at No. 20, Fifth Cross Street, Jaffna, at St. Joseph's Catholic Press, Catholic Mission Premises, Main Street, Jaffna, on Saturday October 7-1961.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org